மத்திய கலாசார நிதியம்

நோக்கம்

இலங்கையின் கலாசார விழுமியங்களை

சர்வதேச அதிசயங்களாக உருவாக்குதல்

செயற்பாடுகள்

இலங்கையின் கலாசார உரிமைகள் தொடர்பான

ஆய்வுகள், பேணிப் பாதுகாத்தல், மறுசீரமைத்தல், அபிவிருத்தி, ஊக்குவித்தல் போன்றவற்றை மேற்கொண்டு

கலாசாரங்களுக்கான நிரந்தர பொருளாதார சாதனைகள் புரிவதன் மூலம்

கீழைத்தேய கலாசாரங்களின் முகாமைத்துவம்

தொடர்பான

மிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்பை ஏற்ற நிறுவனமாக அமைதல

மத்திய கலாசார நிதியத்தின் பணிகளும் குறிக்கோள்களும்

- கலாசார முக்கோணத்தினுள் இருக்கும் கலாசார நினைவுச் சின்னங்கள் மற்றும் கலாசார முக்கோணத்திற்கு வெளியே மக்களின் நன்மை கருதி அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் பிரதேசத்திலுள்ள நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கான செலவுகளை மேற்கொள்ளுதல்.
- ஜேத்தவன தாதுகோபுரத் திட்டத்திற்கு மற்றும் அதே போன்ற வேறு திட்டங்களுக்கான முழுச் செலவுகளையும் மேற்கொள்ளுதல்.
- இலங்கையினுள் அல்லது வெளிநாடுகளில் சமயம் தொடர்பான பணிகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.
- சமயங்களின் மேம்பாட்டிற்காகவும், வழிபாட்டுத் தலங்கள், வழிபாட்டு சம்பிரதாயங்கள் ஆகியவற்றை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் உதவிகளை வழங்குதல்.
- கலாசார மற்றும் சமயத் துறையில் நாட்டிற்காகச் சேவையாற்றுபவர்களுக்கான விருதுகள் வழங்குதல்.
- கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், ஓவியர்களுக்கும், சங்கீதக் கலைஞர்களுக்கும், சிற்பக் கலைஞர்களுக்கும் மற்றும் கலாசார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக சேவையாற்றுபவர்களுக்கும் உதவிகள் வழங்குதல்.
- சபையின் அபிப்பிராயப்படி, மக்களுக்கு நற்பலன்களையளிக்கும் நற்காரியங்களில் ஈடுபடுவோருக்கும், சமய கலாசாரப் பணிகளில் ஈடுபடுவோருக்கும் உதவிகள் வழங்குதல்.

குறிக்கோள்கள்

- தொல்பொருளியல் ஆய்வுகள், ஆராய்ச்சிகள், அகழ்வுகள் மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- சாத்தியமுள்ள, சாத்தியமற்ற கலாச்சார மரபுரிமைகளை ஆய்வு செய்தல், பாதுகாத்தல், பேணிப் பராமரித்தல் மற்றும் அவற்றை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளல்.
- நிறுவனத்தின் மனித வளத்தினை அறிவு பூர்வமானவர்களாகவும், சிந்தனைகள், ஆற்றல்கள் மிகுந்தவர்களாகவும் உருவாக்குதல்.
- நிறுவனத்திற்குரிய தகவல்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், விநியோகித்தல் மற்றும் காட்சிப் படுத்தல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிலையங்களின் மேம்பாடு, பராமரிப்பு மற்றும் அவற்றை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- கலாச்சார மரபுரிமைகளைப் பேணி, மேலைத்தேய, கீழைத்தேய சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்துக் கொள்வதன் மூலமாக இலங்கையின் கலாச்சார விழுமியங்களைப் பிரபல்யப் படுத்துதல்.
- நிறுவனத்தின் வருமான இலக்கை நோக்கிச் செல்லும் பாதையில் எதிர்வரும் நான்கு வருடத்தினுள் நூற்றுக்கு 30 வீத வளர்ச்சியை எட்டும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நிறுவன சேவைகளை மேலும் செயற்றிறன் மிக்கதாக உருவாக்குதல், பாவனையாளர்களைத் திருப்திப் படுத்தும் வகையில் நிறுவனத்தை நடாத்திச் செல்லல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- இனங் காணப்பட்ட கலாச்சாரப் பெறுமதி மிக்க தொகுதிகளை சமூகமயப் படுத்துதல்.
- பல்வேறு சமயங்கள், பல்லின மக்களிடையே புரிந்துணர்வு ஏற்படுத்துதல், தேசிய ஒற்றுமைக்கான உதவிகளை வழங்குதல்.
- தேசிய கொள்கைகளுக்கு இணங்க, தேசிய பல்லினங்களின் அமைப்புக்கள் மற்றும் நிறுவன ஒத்துழைப்புக்கள் இணக்கப்பாடுகளை மேம்படுத்துதல்.
- நவீன சமூகத்திற்கு உகந்த வகையில், நிறுவனத்தின் சேவைகளை நவீன மயப்படுத்துதல் மற்றும் பன்முகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

மத்திய கலாசார நிதியத்தின் முப்பத்து இரண்டாம் ஆண்டறிக்கை – 2014
நிர்வாக சபை

2014 ஆம் ஆண்டின் மத்திய கலாசார நிதியத்தின் நிர்வாக சபையினர்

நிர்வாக சபைத் தலைவர்
பிரதமர் மற்றும் புத்த சாசன, சமய அலுவல்கள் அமைச்சர்,
கௌரவ தி.மு. ஜயரத்ன அவர்கள்

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க அவர்கள்,
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர்

கௌரவ கீதாஞ்சன குணவர்தன அவர்கள்,
பிரதி நிதி அமைச்சர்

கௌரவ பெசில் ராஜபக்ஸ அவர்கள்,
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்

கௌரவ பந்துல குணவர்தன அவர்கள்,
கல்வி அமைச்சர்

கலாநிதி ஜகத் பாலசூரிய அவர்கள்,
தேசிய மரபுரிமைகள் அமைச்சர்

திரு. எஸ் அமரசேகர அவர்கள்,
பிரதமரின் செயலாளர்

திரு. வசந்த ஏக்கநாயக்க அவர்கள்,
செயலாளர்,
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

கலாநிதி செனரத் திசாநாயக்க அவர்கள்,
தொல்பொருளியலாளர், பணிப்பாளர் நாயகம்

திரு. டப்ளியு.ஏ. ரணவீர அவர்கள்,
செயற்பாட்டுப் பணிப்பாளர்,
மத்திய கலாசார நிதியம்

மேற்பார்வை அதிகாரிகள்

திருமதி என். கொடகந்த அவர்கள்,
பணிப்பாளர் நாயகம்,
முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்

செல்வி ஜீ.டீ.சீ. ஏக்கநாயக்க அவர்கள்,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய வரவு செலவுத் திணைக்களம்

மத்திய கலாசார நிதியத்தின் நிர்வாக சபையினதும், பணிக்குழுவினதும் கொள்கை மற்றும் நிறுவனக் கமிட்டி தொடர்பான கூட்டங்கள் 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ளதுடன், மத்திய கலாசார நிதியத்தின் பணிகள் தொடர்பாக கொள்கை சார்ந்த தீர்மானங்கள் மற்றும் வழிகாட்டல்கள் யாவும் நிர்வாக சபையினரால் எடுக்கப்படும் முடிவுகளுக்கமையவும், ஆலோசனைகள் மற்றும் நியதிகளுக்கமையவும் குறித்த நடவடிக்கைகள் யாவும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

மத்திய கலாசார நிதியத்தின் பணிக் குழு

1980 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதியச் சட்டத்தின் பிரகாரம் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், மத்திய கலாசார நிதியத்தின் பிரதான நிர்வாக அலுவலராகக் கடமையாற்றுகின்றார். நிறுவனத்தின் தலைவராக பணிப்பாளர் நாயகம் அவர்கள் கடமையாற்றுவதுடன், மத்திய கலாசார நிதியத்தின் மிக முக்கிய மூன்று பிரிவுகளான நிர்வாகம், அபிவிருத்தி, நிதி ஆகிய பிரிவுகளுக்கு மூன்று பணிப்பாளர்கள் பொறுப்பாகக் கடமையாற்றுகின்றதுடன் நிறுவனத்தின் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிதியத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காக இவ்வருடத்தினுள் கீழே காணப்படுகின்ற எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிரேஷ்ட நிலை முகாமைத்துவ அலுவலர்கள்	02
மூவித மட்டத்திலான முகாமைத்துவ அலுவலர்கள்	21
இருவித மட்டத்திலான முகாமைத்துவ அலுவலர்கள்	335
ஆரம்ப நிலை அலுவலர்கள்	1485
	1832

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

கௌரவ ரீ.பீ. ஏக்கநாயக்க அவர்கள்
கலாசார மற்றும் கலைத்துறை அமைச்சர்

மத்திய கலாசார நிதியம் - 2014
சிரேஷ்ட நிலை முகாமைத்துவ அலுவலர்கள்

பிரதான நிர்வாக அலுவலர்
திரு. வசந்த ஏக்கநாயக்க அவர்கள்
மற்றும்
கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு

பணிப்பாளர் நாயகம்
சிரேஷ்ட தொல்பொருளியல் பேராசிரியர் காமினி அதிகாரி அவர்கள்

செயற்பாட்டுப் பணிப்பாளர்
திரு. டப்ளியு. ஏ. ரணவீர அவர்கள்

பணிப்பாளர் (நிதி)
திரு. டப்ளியு. பீ. சரத் அவர்கள்

பணிப்பாளர் (அபிவிருத்தி)
திருமதி. பீ. எம். ஜீ. மல்தெனிய அவர்கள்

உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்)
தொல்பொருளியலாளர் திரு. காமினி தொடம்வல அவர்கள்

2014 ஆம் ஆண்டின் பௌதீக முன்னேற்றங்கள்

இலங்கையிலுள்ள தொல்பொருளியல் நினைவுச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்குக் கையளிப்பதன் நோக்கத்துடன் மத்திய கலாசார நிதியம் நிறுவப்பட்டது. மத்திய கலாசார நிதியத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பின்வரும் கருத்திட்டங்களுள் அபயகிரித் தூபி மற்றும் ஜேத்தவனத் தூபி ஆகிய கருத்திட்டங்கள் அதிகளவான நிதி செலவு செய்யப்பட்டு, ஏற்கெனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

- ➢ அபயகிரி
- ➢ ஜேத்தவன
- ➢ சீகிரியா
- ➢ பொலொன்னறுவை
- ➢ கண்டி
- ➢ திஸ்ஸமகாராம
- ➢ காலி
- ➢ ரம்பா விகாரை
- ➢ தம்புள்ளை
- ➢ வடமேல் கலாசார சதுக்கக் கருத்திட்டம் (யாபஹுவ, தம்பதெனியா, பண்டுவஸ்நுவர, குருநாகல்)
- ➢ றுஹுணு கலாசார வலயம்

இதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில்,

- அகழ்வுகள் மற்றும் தொல்பொருளியல் ஆய்வுகள் - 105 பணிகள்
- பேணிப் பாதுகாப்பு வேலைத்தளங்கள் - 196 பணிகள்

கருத்திட்டப் பிரேரனைகளின் மொத்த எண்ணிக்கை - 301

இவற்றுள் 266 கருத்திட்டங்களின் பணிகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றினுள்ளும் 48 திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. (22 அகழ்வுகள், 26 பேணிப் பாதுகாப்புக்கள்)

இவ்வருடத்தினுள் 239,299.03 பணிக் கூறுகளில் 157,340.85 பணிக் கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம் பௌதீக முன்னேற்றத்தின் அளவு 65.8 % வீதமாகும். இப்பணிகளுக்கான நேரடிச் செலவாக ரூபா 482,616,697.91 செலவு செய்யப்பட்டுள்ளது. நேரடிச் செலவுகளின் நிதி ரீதியான முன்னேற்றம் 54.9 % வீதமாகும்.

அவ்வவ் கருத்திட்டங்களின் அகழ்வுகள், ஆய்வுகள், பேணிப் பாதுகாத்தல்களின் சுருக்கமான விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஜேத்தவன கருத்திட்டம்

அகழ்வுப் பிரிவு

இவ்வருடத்தில் ஜேத்தவன ஆச்சிரமத் தொகுதிக் கட்டிடமாகிய JMMC 2014 ஆம் ஆண்டின் ஆய்வு அகழ்வுகள், அகழிகள் தோண்டுதல் மற்றும் ஜேத்தவன மகிந்த பிரிவெனா அகழ்வுகள், மல்வத்து குடியிருப்புக்களின் ஆய்வுகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் 2013 ஆம், 2014 ஆம் வருடங்களில் அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களை வகைப்படுத்தல், பகுப்பாய்வுகள் மேற்கொள்ளல் தொல்பொருளியல் ஆய்வறிக்கைகள் தயாரித்தல் மற்றும் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

ஜேத்தவன மகிந்த பிரிவெனாவின் அகழ்வுப் பணிகள் மூலம் புராதன கட்டிடச் சிதைவுகளின் பகுதிகளாகிய மலசலகூடத் தொகுதிகள் மற்றும் நிலக்கீழ் அடித்தளக் கற்கள் ஆகியவற்றையும் வெளிக்கொணர முடிந்தது.

ஜேத்தவன புனித பூமியின் எல்லைகளை இனங்காணுவதற்கும், எதிர்கால அகழ்வுப் பணிகளுக்கு உதவும் முன்மாதிரியான அடிப்படைத் திட்டங்களைத் தயாரிக்கும் நோக்கத்துடன் மல்வத்து குடியிருப்புக்களின் அகழ்வாராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணியாகிய வெஸ்ஸகிரிய பிரதேச தொல்பொருட்களை வகைப்படுத்தி அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அங்குள்ள பப்பத்தாராமயக் கட்டிடங்களுள் ஒன்பது கட்டிடங்களில் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, வரைபடங்கள் தயாரிக்கும் பணிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

2010 ஆம் ஆண்டின் தொல்பொருட்கள் பற்றிய அறிக்கை தயாரித்தல், ஜேத்தவன ஆச்சிரமத்தின் ‘‘பொரதம்’’ பாவனை பற்றிய மூன்று துண்டுப் பிரசுரங்கள் தயாரித்தல், நிலவமைப்புத் தகவல்கள், ஜேத்தவன தொல்பொருளியல் பிரதேசத்தின் பகுப்பாய்வுகள், ஜேத்தவன விகாரைகளில் காணப்படும் கற்சாசனங்கள் தொடர்பான சிற்ப முறைகள், தொழில்நுட்பங்கள் ஆகிய தகவல்கள் அடங்கிய நூல்கள் தயாரித்தல், ஜேத்தவன பிரதேசத்திற்கான வழிகாட்டிகள் தயாரித்தல் ஆகிய முக்கிய பணிகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் தொல்பொருட்களின் வகைப்படுத்தல், பகுப்பாய்வுகள் என்பனவற்றிற்கான பணிகள் தொடர்பாக முத்துக்கள், மட்பாண்டங்கள், பாஷாண மண்வகைகள், உலோகங்கள் போன்ற விடயங்கள் பற்றிய ஆய்வுகள் பலவும் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் ஊக்குவிப்புக்கள் தொடர்பாக நான்கு சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள் கீழே காணப்படுகின்றன.

JMMC 2014 ஆம் ஆண்டின் அகழ்வுகள் மேற்கொள்ளப்படும்போது

ஜேத்தவன மகிந்த பிரிவெனா அகழ்வுகளுக்கு முன்னர்

ஜேத்தவன மகிந்த பிரிவெனா அகழ்வுகளின் பின்னர்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இவ்வருடத்தினுள் அபயகிரி பேணிப் பாதுகாத்தல் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படவிருக்கின்ற மொணற மாளிகையின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள், ஸ்ரீமகா போதி விருட்சத்தின் சுற்றுமதில் மற்றும் தூபியின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள், நிலவமைப்பு, பூங்காக்கள் போன்றவற்றைப் பராமரித்தல், தொழில்நுட்பப் பராமரிப்பு நடவடிக்கைகள் ஆகியவனவும் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த வருடத்தில் ஜேத்தவனவிற்கு உரிய மொணற மாளிகையின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் போது வெளிக் கொணரப்பட்ட தொல்பொருட்களின் ஆய்வுகள் இவ்வருடம் ஜனவரி மாதம் தொடங்கி டிசம்பர் மாதம் வரை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் ஸ்ரீமகாபோதி விருட்சச் சுற்றுமதில் மற்றும் ஜேத்தவன தூபியின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட கருத்திட்டங்களாகும்.

தொழில்நுட்ப ரீதியான பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் கட்டிடங்களில் சாந்து பூசப்படாத பகுதிகளை நிரப்பி சாந்து பூசப்பட்டும், புதிய செங்கற்களைக் கொண்டு கட்டிடங்களைப் பூர்த்தி செய்தலும் இடம்பெற்றன.

வருடம் பூராகவும் தொடர்ச்சியான ரீதியில் நிலவமைப்பு மற்றும் பூங்காக்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருந்தன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

மொணற மாளிகையின் பேணிப் பாதுகாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டபோது



மொணற மாளிகையின் பேணிப் பாதுகாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டபோது

சாந்து பூசப்பட்டு கட்டிடங்களைப் பூர்த்தி செய்யப்படும்போது

ஆச்சிரமத் தொகுதிகளின் கட்டிடங்களைப் பேணிப் பாதுககாக்கும் நடவடிக்கைகளின் போது

ஆச்சிரமத் தொகுதிகளின் கட்டிடங்களைப் பேணிப் பாதுககாக்கும் நடவடிக்கைகளின் போது

அபயகிரி கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

அபயகிரிக் கருத்திட்டத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- 2014 ஆம் ஆண்டின் கபாராமூல அகழ்வாராய்ச்சிகள்
- 36 ஆம் இலக்க வேலைத்தளத்தில் சிலைக்கூடத்து அகழ்வுகள்
- குட்டம் தடாகத்தின் அருகில் புவியமைப்பு அகழ்வுகள்
- அபயகிரி தூபியின் வடதிசைத் தடாகத்தின் அகழ்வுகள்
- ருவான்வெலிசேய வைத்தியசாலை வடதிசை செங்கற் சுற்றுமதிலின் அகழ்வுகள்
- ருவான்வெலிசேயவின் கிழக்குத்திசையிலுள்ள மூன்று சின்னங்களின் அகழ்வுகள்
- தூபாராம ருவான்வெலிசேய விகாரைகளுக்கு இடையேயான நடைபாதையின் அகழ்வுகள்
- தூபாராம விகாரையின் 59 ஆம் இலக்கக் கட்டிடத்தின் அகழ்வுகள்
- தூபாராம கிழக்குத் திசையிலுள்ள ''பதலச'' சைத்தியவின் அகழ்வுகள்

இதன் பிரகாரம் கபாராமூல அகழ்வுகளின் போது, அதன் கலாச்சாரம் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு கட்டங்களில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, முதற் கட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், பெருமளவான புராதனத் தகவல்கள் கண்டறியப்பட்டன.

அபயகிரி விகாரை வளவில் அமைந்துள்ள சிலைக்கூடம் ஒன்றின் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதற்கு 36 ஆம் இலக்கக் கட்டிடத்தின் அகழ்வுகள் எனப் பெயரிடப்பட்டன. அப்பிரதேசத்தில் மிக அரிதாகவே சிலைக்கூடங்கள் காணப்படுகின்ற போதும், இவ்வகழ்வுகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டன.

அபயகிரி விகாரை வளவில் சுற்றுமதிலுக்கு வெளியேயுள்ள தடாகத்தின் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அதன் கரையோரங்கள் மற்றும் தொல்பொருட் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ருவான்வெலிசேய வைத்தியசாலை வடதிசை செங்கற் சுற்றுமதிலின் எல்லைகளில் அகழ்வுகள் நடாத்தப்பட்டதுடன், ருவான்வெலிசேயவின் கிழக்குத்திசையிலுள்ள மூன்று சின்னங்களின் அகழ்வுகளும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

தூபாராம விகாரையிலிருந்து ருவான்வெலிசேயாவிற்குச் செல்லும் நடைபாதையின் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போது, பெற்றுக் கொண்ட தகவல்களின் பிரகாரம், அது புராதன காலத்தில் இரண்டு பிரிவெனாக்களுக்கு இடையில் கட்டப்பட்ட எல்லைச் சுற்றுமதில் எனக் கண்டறியப்பட்டது. அத் தகவல்களின் அறிக்கை தயாரிக்கப்பட்டதுடன், அகழ்வு நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

தூபாராமவின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள ''பதலச சேதிய'' எனப்படும் விகாரையில் புனித சின்னங்களாகக் கருதப்படும் நின்ற நிலை புத்தர் சிலைகள் பேணிப் பாதுகாக்கப்பட்டு அகழ்வாராய்ச்சிகள் நடாத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன.

''பதலச தூபி'' என அழைக்கப்பட்ட நான்கு தூபிகளுள் இரண்டு தூபிகள் முழுமையாக பேணிப் பாதுகாத்துப் பராமரிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய இரு தூபிகளையும் பராமரிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பிரித்தானிய காலகட்டத்தில் இங்கு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது ஏற்பட்ட சிதைவுகள் காரணமாக எதிர்பார்த்த விதத்தில் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொண்டு, இதனைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது.

இவை தவிர, பூங்காக்களின் பராமரிப்பு, நூலகங்களின் அபிவிருத்தியும் பராமரிப்பும், அகழ்வுகளின் அறிக்கைகள் தயாரித்தல், ஊக்குவிப்பு நடவடிக்கைகள் ஆகியனவும் வருடம் முழுவதும் தொடர்ச்சியாக இடம்பெற்றன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

கபாரமூல அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னரும் பின்னரும்

36 ஆம் இலக்க வேலைத்தளத்தில் சிலைக்கூடத்து அகழ்வுகளின் முன்னரும் பின்னரும்

ருவான்வெலிசேயவின் கிழக்குத்திசையிலுள்ள மூன்று சின்னங்களின் அகழ்வுகளின் முன்னரும் பின்னரும்

59 ஆம் இலக்கக் கட்டிடத்தின் அகழ்வின் பின்னர்

தூபாராம ருவான்வெலிசேய விகாரைகளுக்கு இடையேயான நடைபாதையின் அகழ்வுகள்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

அபயகிரி பேணிப் பாதுகாத்தல் கருத்திட்டத்தின் கீழ் 2014 ஆம் வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்ட பேணிப் பாதுகாத்தல், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- குட்டம் தடாகத்தின் 01 ஆம், 02 ஆம் இலக்கக் கட்டிடங்கள் பேணிப் பாதுகாத்தல்
- தூபாராம, ருவான்வெலிசேய வைத்தியசாலைகளைப் பேணிப் பாதுகாத்தல்
- அபயகிரி நூதனசாலையின் நுழைவாயில், தொல்பொருட்கள் பிரிவு பேணிப் பாதுகாத்தல்
- ருவான்வெலிசேய விகாரையின் வெளிச் சுற்றுமதிலைப் பேணிப் பாதுகாத்தல்
- அபயகிரி தூபியினைப் பேணிப் பாதுகாத்தல்
- நூதனசாலை 13 ஆம் இலக்க கட்டிடத்தின் கூரையும் நுழைவாயிலும் புதுப்பித்தல்,
- ருவான்வெலிசேயவில் குடிநீர்க் குழாய்களை அமைத்தல்
- அபயகிரி அலுவலகத்தினைப் புதுப்பித்தல்
- பேணிப் பாதுகாத்தல், திட்டமிடல் பிரிவுக் கட்டிடங்களைப் புதுப்பித்தல்

இதன் பிரகாரம் அபயகிரி விகாரை வளவில் அமைந்துள்ள குட்டம் தடாகத்தின் மேற்குப் புறத்தில் 01 ஆம், 02 ஆம் இலக்கக் கட்டிடங்களாகிய பிக்குமாரின் தங்குமிடங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன. தூபாராம விகாரையின் தெற்குப் பகுதியில் ‘‘வைத்தியசாலை’’ என அழைக்கப்படும், நினைவுச் சின்னமாக விளங்கும் ஒரு கட்டிடத்தைப் பேணிப் பாதுகாப்பதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அபயகிரி விகாரை வளவில் கடந்த காலத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்ட புனித சின்னங்கள் சிதைவடைந்ததன் காரணமாக அவற்றை மீண்டும் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன. சிதைவடைந்த செங்கற்களை அகற்றி, புதிய செங்கற்கள் கொண்டு மறுசீரமைக்கப்பட்டன. இதே சமகாலத்தில் ருவான்வெலிசேயவின் மணல் மாடத்தினைச் சுத்திகரித்தல், நீர் வழிந்தோடும் நீர்க் குழாய்கள் பொருத்தப்படுதல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவை தவிர, அபயகிரி விகாரை வளவில் பராமரிப்புக்கள், நினைவுச் சின்னங்களுக்கான பாதைகள் மறுசீரமைத்தல், கட்டிடங்களின் பராமரிப்புக்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் இவ்வருடத்தினுள் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

குட்டம் தடாக 01 ஆம் இலக்கக் கட்டிடம் பேணிப் பாதுகாப்பதற்கு முன்னரும் பின்னரும்

குட்டம் தடாக 02 ஆம் இலக்கக் கட்டிடம் பேணிப் பாதுகாப்பதற்கு முன்னரும் பின்னரும்



ருவான்வெலிசேய வைத்தியசாலைக் கட்டிடம் பேணிப் பாதுகாப்பதற்கு முன்னரும் பின்னரும்

அபயகிரி நூதனசாலை

2014 ஆம் ஆண்டில் அபயகிரி நூதனசாலை மூலம் நாளாந்த சாதாரண அரும்பொருட்களையும், விசேட அரும்பொருட்களையும் காட்சிப் படுத்தப்பட்டதுடன், பொதுமக்களுக்குத் தெளிவூட்டல் நிகழ்ச்சிகளும் நடாத்தப்பட்டன.

விசேட கண்காட்சி நிகழ்ச்சியாக 2014 ஆம் ஆண்டு மே மாதம் தியவன்னா ஓயாவிற்கருகில் இடம்பெற்ற கண்காட்சியில் அபயகிரி விகாரையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட விசேட வெண்கல புத்தர் சிலைகள் காட்சிப் படுத்தப்பட்டன.

அத்துடன் அரும்பொருட்களின் பாதுகாப்பு மற்றும் விசேட அரும்பொருட்களைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் என்பன வருடம் முழுவதும் இடம்பெற்றன. அத்துடன் செதுக்கு வேலைப்பாடுனான காவற்கற்கள், கற்பக விருட்சம் அமைந்த காவற்கற்கள், மணிக்கூடு, நாகராஜா நாகராஜினி காவற்கற்கள் ஆகிய விசேட அரும்பொருட்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

நூதனசாலையின் பராமரிப்பு தொடர்பாக கூரையை மறுசீரமைத்தல், பாதுகாப்பான கதவுகளை முறையாக அமைத்தல், பூங்காவைப் பராமரித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

நூதனசாலையின் வருடாந்த வருமானம் 653,004.00 ரூபாக்களாகும்.

நூதனசாலையின் வருடாந்த முன்னேற்றம்

அரும்பொருட்களைப் பேணிப் பாதுகாத்தலும், நூதனசாலையின் அலங்காரத் தோற்றமும்

பொலொன்னறுவை கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இவ்வருடத்தில் தெமழமகாசேய விகாரையின் அகழ்வுப் பணிகள் காலாண்டு முறையில் நான்கு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டன. இதன் முதற் கட்ட அகழ்வுகள் மேற்கொள்ளப்படடு நடைமுறைப் படுத்தப்பட்டன. இவ் அகழ்வுகளின் போது பெற்றுக் கொண்ட மண் தட்டுக்களின் மாதிரிகளை ஆய்வுக்கு உட்படுத்தி தொழில்நுட்ப முறையில் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் 2013 ஆம், 2014 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட ஆன்மீகப் போதனைகள், தொல்பொருளியல் கருத்தரங்குகள் போன்றவை உள்ளடங்கிய சஞ்சிகை தயாரித்தலும் இவ்வருடத்தில் இடம்பெற்றன.

அத்துடன் இரண்டு மாணவர் பயிற்சித் திட்டங்கள் இரண்டு கட்டமாக நடாத்தப்பட்டதுடன், இதில் றுஹுணு பல்கலைக் கழக தொல்பொருளியல் பிரிவு மாணவர்களும், களனிப் பல்கலைக் கழக தொல்பொருளியல் பிரிவு மாணவர்களும் பங்குபற்றினர்.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தினை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

தெமழமகாசேய விகாரையின் முதற் கட்ட அகழ்வுப் பணிகளின் முன்னரும் பின்னரும்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இவ்வருடத்தில் கீழ்க் கண்ட பேணிப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- அத்துல்நுவர கிழக்குப் பகுதி, வடக்குப் பகுதி சுற்றுமதில்கள் பேணிப் பாதுகாத்தல்
- பராக்கிரமபாகு மன்னன் மாளிகையைப் பேணிப் பாதுகாத்தல்.
- லங்காதிலக விகாரையின் சிலைக்கூடம் பேணிப் பாதுகாத்தல்.
- அத்துல்நுவர தெற்குப் பகுதி சுற்றுமதில் பேணிப் பாதுகாத்தல்.
- தொழில்நுட்ப முறைப் பராமரிப்புகள்
- நடைபாதைகள் அமைத்தல்.
- கட்டிடப் பராமரிப்புகள்
- பொதுப் பராமரிப்புகள்.
- கிரிவிகாரையில் சுண்ணாம்பு பூசுதல்

இதன் பிரகாரம் கடந்த வருடத்தில் நடைமுறையிலிருந்த வேலைத்தளமாகிய அத்துல்நுவர கிழக்குப் பகுதி, வடக்குப் பகுதி சுற்றுமதில்கள் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் இவ்வருடம் தொடர்ந்து இடம்பெற்றன. இதன் போது சிதைவுகளில் சாந்து பூசுதல் மற்றும் அடிப்பகுதிகளில் செங்கற்கள் பதித்தல் ஆகிய நடவடிக்கைகள் இடம்பெற்றன.

அத்துல்நுவர பராக்கிரமபாகு மன்னன் மாளிகையின் உட்புறத்தில் உள்ள புராதனச் சுவர்கள் பாதிப்புற்ற நிலையிலிருந்தமையால், அவற்றை மறுசீரமைப்பதற்கு விசேடமான கலவைகள் தயாரிக்கப்பட்டு அவற்றை மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

லங்காதிலக விகாரைச் சிலைக்கூடத்தின் வடக்குப் பகுதி சுவரில் காணப்பட்ட சிதைவுகளுக்கு விசேட கலவை கொண்டு தயாரிக்கப்பட்ட சாந்து பூசப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டதுடன், உடைந்த செங்கற்களை அகற்றி, புதிய செங்கற்களால் கட்டப்பட்டு மறுசீரமைக்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டில் அத்துல்நுவர விகாரையின் தென் பகுதி சுற்றுமதிலின் அகழ்வுப் பணிகளின் போது பெற்றுக் கொண்ட தரவுகளின் அடிப்படையில் இவ்வருடம் தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாது போனதால் மேலும் அகழ்வுகள் மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டன.

அத்துடன் தொழில்நுட்ப ரீதியான பராமரிப்பு நடவடிக்கைகளின் போது பிட்டத்த நுவர விகாரை வடக்கு வாயில் தொடங்கி ரன்கொத் விகாரை வரையான பாதை மற்றும் தொல்பொருள் சார்ந்த பிரதேசங்களுக்கான நடைபாதை ஆகியவற்றின் இருமருங்கிலும் உள்ள செங்கற்கட்டுக்களைப் பேணிப் பாதுகாத்தலும் இடம்பெற்றன. அத்துடன் தேவாலயங்கள், போதி விருட்ச அறைகள் ஆகியவையும் பேணிப் பாதுகாக்கப்பட்டன. பொத்குல் விகாரை, கிரிவிகாரை, பராக்கிரமபாகு

மாளிகை ஆகியவற்றிற்கான பாதைகள் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும் இவ்வருடத்தினுள் இடம்பெற்றன.

பொதுப் பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ், மரவேலைகள் செய்வதற்கான அறையொன்று கட்டுதல், பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கும் சாரதிகளுக்கும் தங்குவதற்கான அறைகள் கட்டுதல், அலுவலக வாகனத் தரிப்பிடம் அமைத்தல் என்பன இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும்.

வருடத்தினுள் இடம்பெற்ற பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

பிட்டத்த நுவர வடக்கு வாயில் தொடங்கி ரன்கொத் விகாரை வரையான பாதை மறுசீரமைப்பிற்கு முன்னர்

பிட்டத்த நுவர வடக்கு வாயில் தொடங்கி ரன்கொத் விகாரை வரையான பாதை மறுசீரமைப்பிற்குப் பின்னர்

கிரி விகாரை சுண்ணாம்பு பூசுவதற்கு முன்னர்

கிரி விகாரை சுண்ணாம்பு பூசியதன் பின்னர்

சீகிரியா கருத்திட்டம்
அகழ்வாராய்ச்சிப் பிரிவு

சீகிரியா வளவிற்கு உட்பட்டுள்ள நீர் நிறைந்த அகழிகளின் தெற்கு மற்றும் மேற்கு அந்தங்கள் முழுமையாகப் பேணிப் பாதுகாக்கப்பட்டிருந்த போதும், வடக்கு அந்தம் பேணிப் பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையினால் கடந்த வருடத்தில் ஆரம்பிக்கப்பட்ட அகழியின் வடக்கு அந்தம் தொடங்கி நீர் வெளியேற்றும் வான் கதவுகள் வரை அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் இவ்வருடத்திலும் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது மட்பாண்டங்கள் உட்பட பல அரும்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

அத்துடன் சிங்கபாதத்தின் மேற்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வு ஆராய்ச்சிகள் மூலம் பல தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்புக்கள் கிட்டலாம் என நம்பப்படுகின்றது.

சீகிரியா பிரதேசத்தில் வடக்குப் பகுதி அகழியில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்கு உரியதெனக் கருதப்படும் பல அரும்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளமை இவ்வருடத்தின் முக்கிய நிகழ்வாக அமைந்துள்ளது.

அத்துடன் அகழ்வுகளின் போது கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களைப் பகுப்பாய்வு செய்தல், தொல்பொருட்களைப் பேணிப் பாதுகாத்தல், அகழ்வுகள் பற்றிய அறிக்கைகளை அச்சிடுவதற்காகத் தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் இவ்வருடத்தில் இடம்பெற்றன.

இவை தவிர, 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள், பேணிப் பாதுகாத்தல்கள் மற்றும் ஏனைய பிரிவுகளின் திட்டங்கள் தயாரித்தல் ஆகியனவும் இடம்பெற்றன.

சீகிரியா நூதனசாலையில் விசேட கண்காட்சிகள், ஆவணக் களஞ்சியங்கள், கூடங்கள், தொல்பொருட்களின் தரவுகளை நிரந்தரமாக ஒழுங்குபடுத்தல் மற்றும் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

அகழியில் அகழ்வுகள் மேற்கொண்டமையும், கண்டெடுக்கப்பட்ட அரும்பொருளும்

சிங்கபாதத்தின் மேற்குப் பகுதி அகழ்வுக்கு முன்னர்

சிங்கபாதத்தின் மேற்குப் பகுதி அகழ்வின் பின்னர்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

சீகிரியாக் கருத்திட்டத்தின் கீழ் 2014 ஆம் வருடத்தில் கீழ்க் காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சிங்கபாதத்தின் மேற்குப் பகுதியில் கருங்கற் கட்டு பேணிப் பாதுகாத்தல்.
- மேற்கு நுழைவாயிலின் இருபக்கங்களிலும் உள்ள வட்ட வடிவமான கட்டு பேணிப் பாதுகாத்தல்.
- ''மெதமிதுல'' எனப்படும் நடுமுற்றப் பூங்காக் கரைகளில் கட்டுக்கள் பேணிப் பாதுகாத்தல்.
- போதிவிருட்ச மண்டபங்களைப் பேணிப் பாதுகாத்தல்
- நன்னீர் பூங்காக்களின் கட்டுக்கள் பேணிப் பாதுகாத்தல்.
- SW எனப்படும் தடாகத்தின் பேணிப் பாதுகாத்தல்.
- தெற்கு நுழைவாயில் தொடங்கி மேற்கு வாயில் வரை அமைந்துள்ள ''நயிபென'' எனப்படும் நாகபடக் குகையில் உள்ள வாய்க்கால்கள் பராமரித்தல்.
- ''மாலக'' எனப்படும் பூங்காவின் செங்கற் கட்டுக்கள் பேணிப் பாதுகாத்தல்.
- மொரகஹமுல புவியமைப்பின் பராமரிப்பு.

இதன் பிரகாரம் முதற் கட்டமாக சிங்கபாதத்தின் மேற்குப் பகுதியில் காடு மண்டிக் கிடந்த கருங்கற் கட்டுக்களை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மனித வளம், மூலப்பொருட்களின் பற்றாக்குறைகள் காரணமாக தொடர்ந்தும் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கான சாத்தியம் காணப்படாததால், அவை அடுத்த வருடத்திற்காகப் பின்போடப்பட்டன.

சிங்கபாத மாடத்தில் நீரினால் ஏற்படும் மண் அரிப்புக் காரணமாக சிதைவுகள் உண்டாவதனைத் தடுக்கும் நடவடிக்கையாக மெதமிதுல பூங்காவின் கரைகளில் கட்டுக்கள் அமைக்கப்பட்டன.

தெற்கு நுழைவாயில் தொடங்கி மேற்கு வாயில் வரை அமைந்துள்ள 800 அடி நீளமான வாய்க்கால்கள் மறுசீரமைக்கப்பட்டு நீர் வழிந்தோடுவதற்கேற்ற வகையில் அமைக்கப்பட்டன.

மெதமிதுல எனப்படும் பூங்காவின் கரைகளிலுள்ள கட்டுக்களில் கழன்று இருந்த கருங்கற்களை மீண்டும் கட்டமைத்து உரிய முறையில் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் தொழில்நுட்ப ரீதியான பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் ''மாலக'' எனப்படும் பூங்காவின் செங்கற் கட்டுக்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டன. அத்துடன் மெதமிதுல, சபா மண்டபம், 02 ஆம் இலக்க இயற்கை அரைவட்ட கற்குகையின் அருகேயுள்ள செங்கற் கட்டுக்கள் ஆகியனவும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

''நயிபென'' எனப்படும் நாகபடக் குகையில் உள்ள வாய்க்கால்கள் வழியாகச் செல்லும் மழைநீர் முறையாக வழிந்தோடுவதற்கேற்ற முறையில் செங்கற்களால் கட்டுக்கள் அமைக்கப்பட்டு சாந்து பூசும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த வருடத்தின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட மொறகஹமுல பூங்கா அமைக்கும் பணிகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான பராமரிப்புக்கள் இவ்வருடத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. பூங்காவிற்குப் புற்தட்டுக்கள் பதித்தல், நடைபாதையில் குறுணிக் கற்கள் இடல், சீமெந்தினால் கட்டப்பட்ட வாங்குகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் நுண்ம உயிரினங்கள் வாழும் நீர்ப் பூங்காவின் SW எனப்படும் தடாகத்தில் பாசி படர்ந்து இருந்தமையால் அவை சுத்திகரிக்கப்பட்டும், பாதிப்படைந்து இருந்த கட்டிடப் பகுதிகள் செங்கற்கள் கொண்டு மறுசீரமைத்தும், நிலக்கீழ் வாய்க்கால்கள் மறுசீரமைக்கப்பட்டும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

SW தடாகத்தின் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும் பின்னரும்

SW தடாகத்தின் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும் பின்னரும்

பூங்காக் கரைகளில் கட்டுக்கள் மறுசீரமைத்தலுக்கு முன்னர்

பூங்காக் கரைகளில் கட்டுக்கள் மறுசீரமைத்தலுக்குப் பின்னர்

தம்புள்ள கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இவ்வருடத்தினுள் தம்புள்ள கருத்திட்டத்தின் மூலம் வலகம்பா பிரிவெனா மெத பன்சலையில் பிக்குமாரின் ஆச்சிரமம், போதி விருட்ச மாலகாராம விகாரை ஆகிய கட்டிடங்களை வாஸ்து விஞ்ஞான ரீதியாக பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுவரோவியங்கள் பேணல் திட்டத்தின் கீழ் வனசிங்காராம ரஜமகா விகாரை, அம்பரலிய டெம்பிட்ட விகாரை ஆகியவற்றிலுள்ள சுவரோவியங்களைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மாத்தளை மாவட்டத்திலுள்ள வலகம்பா பிரிவெனா மெத பன்சலையில் பிக்குமாரின் ஆச்சிரமத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு, இவ்வருடத்தில் கூரை மற்றும் உக்கிப் போயிருந்த பகுதிகளை மறுசீரமைத்துப் பேணிப் பாதுகாக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன.

போதி விருட்ச மாலகாராம விகாரையின் மின்சாரத் தொகுதியைப் புதுப்பித்தல், சுவர்கள் மற்றும் நிலம் என்பவற்றை மறுசீரமைக்கும் பணிகளுக்கான மூலப்பொருட்கள் பெற்றுக் கொண்ட போதும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டிற்குப் பின் போடப்பட்டன.

இவை தவிர, அநுராதபுர மாவட்டத்தில் மகாவலி ''எச்'' வலயத்தில் உள்ள வனசிங்காராம ரஜமகா விகாரையின் சுவரோவியங்களும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

கெக்கிராவ பிரதேசத்தில் உள்ள அம்பரெலிய டெம்பிட்ட விகாரையின் சுவரோவியங்களும் பேணிப் பாதுகாக்கப்பட்டதுடன், அங்கிருந்த சுவர்ப் பூச்சுக்களில் சிதைவுகள் ஏற்பட்டிருந்தமையால் விசேட சாந்து பூசப்பட்டு மறுசீரமைக்கப்பட்டன.

இதே வேளையில் சுவரோவிய நூதனசாலையின் உள்ளக மற்றும் வெளிப்புற பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மின்சாரத் தொகுதியினைப் பரிசீலனை செய்து மின்விளக்குகள் ஆகியவற்றைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் வகையில் நிலவமைப்பு மற்றும் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு பேணப்பட்டன.

இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட அதே வேளையில் நூதனசாலைப் பணிக்குழுவினர் மேற்கொண்ட கல்வி ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் மற்றும் மாணவர்களுக்கான சித்திரப் போட்டி, கல்விக் கருத்தரங்குகள், பௌத்த பல்கலைக் கழக பிக்குகள் ஐம்பது பேர் கொண்ட குழுவினரின் பங்களிப்புடன் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் ஆகியனவும் நடாத்தப்பட்டன.

இதே வேளையில் இலங்கையின் மிகச் சிறந்த ஓவியங்களின் தொகுப்பு ஒன்றினை தம்புள்ளை ஓவியங்கள் நூதனசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், அங்குள்ள கன்வஸ் சித்திரக் களஞ்சியத்தினை நாளாந்தம் பராமரிப்பதும், பழைய ஓவியங்களைப் பேணிப் பராமரிக்கும் நடவடிக்கைகளும் வருடம் முழுவதும் இடம்பெற்றன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்



வனசிங்காராம ரஜமகா விகாரை பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

வனசிங்காராம ரஜமகா விகாரையின் சுவரோவியங்கள் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

நூதனசாலைக் களஞ்சியத்தில் சுவரோவியங்களைப் பேணுதல்

கண்டி கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இவ்வருடத்தில் முக்கியமாக பம்பரகல மற்றும் கோனவத்த தொல்பொருளியல் பிரதேசங்களில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பம்பரகல மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள், அகழ்வுகள் மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இவ்வருடத்திலும் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது ஆரம்ப வரலாற்றுக் காலகட்டத்து கல் ஆயுதங்கள் உட்பட்ட பிரதேசங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

அத்துடன் கோனவத்த தொல்பொருளியல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது பிராஹ்மி எழுத்துக்கள் அடங்கிய கல்வெட்டு ஒன்றின் பிரகாரம், அதன் சுற்றுப் பிரதேசம் முழுவதும் பரந்து காணப்பட்ட தொல்பொருட்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. குண்டசாலை நரேந்நதிரசிங்க ரஜமகா விகாரையின் நூதனசாலையிலுள்ள ஏட்டுச் சுவடிகள், ஏனைய தொல்பொருட்கள் ஆகியவற்றை ஆய்வுக்குட்படுத்தி தகவல்களைச் சேகரித்தலும் இவ்வருடத்தில் இடம்பெற்றன.

அகழ்வுகள், பேணிப் பாதுகாத்தல்களை அறிக்கைப் படுத்துதல், தொல்பொருட்களைப் பகுப்பாய்வு செய்தல், கல்வி மற்றும் பிரச்சார நடவடிக்கைகள், தொல்பொருட்களின் பிரதி உருவமைப்புக்கள் தயாரித்தல், வெளியீடுகளின் விற்பனை மற்றும் மெதவாசல பிசோ நூதனசாலையின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்



பம்பரகல தொல்பொருளியல் பிரதேசத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளல்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இவ்வருடத்தில் கீழ்க் காணப்படும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- ராம விகாரையின் எஞ்சிய வேலைகள்
- பிலவல கல்ஏதண்ட ரஜமகா விகாரையின் எஞ்சிய வேலைகள்
- வத்துபொல புராண விகாரையின் எஞ்சிய வேலைகள்
- தெகல்தொருவ கடலாதெனிய ரஜமகா விகாரைப் பௌர்ணமி இல்லம்
- அஸ்கிரி விகாரைத் தொகுதியின் பிரிவெனா
- பொத்துஹெர மடுகல்ல விகாரை
- அஸ்கிரிய மெத பன்சலையும், புராதன கிணறும்
- வத்துபொல புராண விகாரையின் பிக்குமார் தங்குமிடம்
- அஸ்கிரிய கெடிகே விகாரையின் வாயிற் கதவு
- உலக உரிமைகள் கூறு
- உலக உரிமைகள் நகரத்தின் சின்னங்களைப் பராமரித்தல்
- கிராகம வளவு
- விடுவிப்போர் படையினர் கட்டிடம்
- பொதுப் பராமரிப்புக்க

ராம விகாரையின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. பிலவல கல்ஏதண்ட ரஜமகா விகாரையின் சிலைக்கூடம், போதனா மண்டபம் ஆகியவற்றின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளும் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

வத்துபொல புராண விகாரையின் போதனா மண்டபத்தில் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட மறுசீரமைப்புக்கள் தொடர்ந்தும் இடம்பெற்றதுடன், அங்குள்ள சித்திரங்கள், அலங்காரச் சிற்பங்கள் ஆகியவற்றை மீண்டும் மறுசீரமைக்கப்பட்டுப் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் சிதைவடைந்திருந்த தெகல்தொருவ புராண ரஜமகா விகாரையின் பௌர்ணமி இல்லம் மற்றும் கடலாதெனிய ரஜமகா விகாரையின் பௌர்ணமி இல்லம் ஆகியவற்றையும் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அஸ்கிரி விகாரைத் தொகுதியிலுள்ள பிரிவெனாக் கட்டிடம், பொத்துஹெர மடுகல்ல விகாரையின் கூரை ஆகியவற்றின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மத்திய கலாசால நிதியமும், கடற்படையினரும் இணைந்து மேற்கொண்டனர்.

அஸ்கிரி விகாரைத் தொகுதியிலுள்ள பிக்குமார்கள் உபயோகித்த புராதன கிணறு, அஸ்கிரிய மெத பன்சலை எனப்படும் விகாரையின் பிக்குமார் தங்குமிடத்தின் கூரை ஆகியவற்றினைப் பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் வருட இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டமையால் அவற்றைப் பூர்த்தி செய்வதற்கான கால அவகாசமின்மையால் அத்திட்டங்கள் 2015 ஆம் வருடத்திற்காகப் பின்போடப்பட்டுள்ளன.

சுவரோவியப் பேணிப் பாதுகாத்தல் பிரிவின் மூலம் வளல ரஜமகா விகாரை, தித்தபஜ்ஜல ரஜமகா விகாரை, தெம்பரலேவ ரஜமகா விகாரை, நியங்கம்பாய ரஜமகா விகாரை ஆகியவற்றின் சுவரோவியங்கள் பேணிப் பாதுகாத்தல், பராமரித்தல், அறிக்கையிடல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் கண்டி நகரத்தினதும், மத்திய மாகாணத்தினுள் அமைந்திருக்கும் நினைவுச் சின்னங்களினதும் தகவல்களை பரிசீலனையின் பின்னர் அறிக்கையிடுதல், போதொட்ட ரஜமகா விகாரை, ஹத்தரலியத்த கலாச்சார மண்டபம், புனித போல் தேவாலயம் ஆகியவை பேணிப் பராமரிக்கப்படல் ஆகிய நடவடிக்கைகளும் இடம்பெற்றன. கண்டி உலக உரிமைகள் கமிட்டியும், உதவிக் கமிட்டியும் இணைந்து கட்டிடங்களை மேற்பார்வை செய்தும், கட்டிட உரிமையாளர்களுக்கும், நிர்மாணத் துறையினருக்கும் தேவைப்படும் ஆலோசனைகள் வழங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன் கிராகம வளவு, விடுவிப்போர் படையினர் கட்டிடம், வத்துபொல புராண விகாரையின் பிக்குமார் தங்குமிடம் ஆகியவை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கான திட்டங்கள் தயாரிப்பதும் இடம்பெற்றன.

கருத்திட்டத்தின் வசதிகளை மேம்படுத்தும் முகமாக சர்வதேச தகவல்கள் நிலையத்தினைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்கள், பூங்காக்கள் ஆகியவற்றைப் பராமரிக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் மிக முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

பிலவல கல்ஏதண்ட ரஜமகா விகாரையின் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

வத்துபொல புராண விகாரை போதனா மண்டபம் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

தித்தபஜ்ஜல ரஜமகா விகாரைச் சுவரோவியங்கள் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

தெம்பரலேவ ரஜமகா விகாரைச் சுவரோவியங்கள் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

ரம்பா விகாரைக் கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் நிலத்திட்டத்தின் 23/11 ஆம் இலக்க ஆச்சிரமத் தொகுதியின் அகழ்வுகள் முக்கிய இடம் பெற்றன. இந் நடவடிக்கைகள் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்டு, எஞ்சிய வேலைகள் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டன. இங்குள்ள கட்டிடம் ஒரு தூபியாக இருக்கலாம் எனக் கருதப்படுவதுடன், அங்கு மட்பாண்டத் துண்டுகள், முத்துக்கள், கண்ணாடி வளையல்கள் ஆகிய அரும்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

அத்துடன் தொல்பொருளியல் தகவல்கள் சிலவற்றை உறுதி செய்யும் பொருட்டு தனியாருக்குச் சொந்தமான காணியொன்றில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 19 குழிகள் தோண்டப்பட்டன.

அத்துடன், விசேட மட்பாண்டங்கள் மற்றும் விசேட அரும்பொருட்கள் பற்றிய தொல்பொருளியல் பகுப்பாய்வுகளும் வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

2013 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் போது 10/1 ஆம் இலக்க ஆச்சிரமத்தின் எஞ்சிய வேலைப் பகுதிகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

அத்துடன் 15 ஆம் இலக்கக் கட்டிடத்தின் வெளிப்புற மதிலின் நிர்மாணப் பணிகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. அங்கு காவலாளி அறையின் நிர்மாணப் பணியும் பூர்த்தி செய்யப்பட்டது.

இவை தவிர, ருஹுணு கவய என்னும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட சித்தம்கல்லென விகாரையின் போதனா மண்டபம், கலகம சைலாராமயவின் விகாரை மண்டபம் ஆகியவற்றின் புதுப்பித்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

தொழில்நுட்ப ரீதியான பராமரிப்பு நடவடிக்கைகளின் மூலம் பேணப்பட்ட சின்னங்களுள் அத்தியாவசியமாகப் பராமரிக்கப்பட வேண்டியவற்றின் பேணல்கள், பூங்காக்கள், இரசாயனகூடம், புராதன பூச்சுக் குழைப்புக்கள் ஆகியவற்றைப் பேணிப் பாதுககாக்கும் நடவடிக்கைகள் மற்றும் ஒழுங்குபடுத்துதல் ஆகியவை தொடர்ந்து இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன.

திஸ்ஸமகாராம கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அக்குருகொட தொல்பொருளியல் ஆய்வுகளுக்கான அகழ்வு நடவடிக்கைகள் இவ்வருடமும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன. 5.5 மீட்டர் ஆழத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அங்கு நூற்றுக் கணக்கான வருடங்களாக மனிதக் குடியிருப்புக்கள் இருந்தமைக்கான பல சான்றுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இந்த அகழ்வுகளின் போது நாணயங்கள், சிவப்பு, கறுப்பு நிற மட்பாண்டங்கள், முத்துக்கள், மனித அஸ்தி, ஆபரணங்கள், கண்ணாடிப் பொருட்கள், இரும்புப் பொருட்கள் ஆகியன கண்டெடுக்கப்பட்டன.

அத்துடன், 08 ஆம் இலக்க சிலைக்கூடத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, பேணிப் பாதுகாக்கப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வரட்சி காரணமாக, திஸ்ஸமகாராம பிரதேசத்திலுள்ள வாவிகள் தூர்ந்து போன பின்னர் அங்கு பல ஆய்வுகள் நடாத்தப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் மேற்கொண்ட அகழ்வுகள் பற்றிய அறிக்கை தயாரித்தல், கண்டெடுக்கப்பட்ட அரும்பொருட்கள் பற்றிய அறிக்கை தயாரித்தல், அவற்றைப் பகுப்பாய்வு செய்தல், வரைபடங்கள் தயாரித்தல் ஆகியனவும் இவ்வருடத்தில் இடம்பெற்றன.

அத்துடன் இரசாயன ஆய்வுகூடம், நூதனசாலைப் பராமரிப்பு, பிரச்சார நடவடிக்கைகள் என்பன தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. பிரச்சாரப் பிரிவின் கீழ் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்களுக்கும், பல்கலைக் கழக மாணவர்களுக்கும் கல்விக் கருத்தரங்குகள் வருடாந்தம் நடைபெறுகின்றன. துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வெளியிடல். இணையத் தளங்களைத் தயாரித்தல் ஆகியனவும் இடம்பெற்றன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

வருட இறுதியில் அறிக்கை தயாரிப்பதற்கான அக்குருகொட அகழ்வுகளின் புகைப்படங்கள்

மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

திஸ்ஸமகாராம கருத்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிக்குணிமார் ஆச்சிரமத்தின் சமையலறையின் மறுசீரமைப்புப் பணிகள் இவ்வருடம் பூர்த்தி செய்யப்பட்டன.

பொதுப் பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் நாளாந்தம் பின்வரும் நினைவுச் சின்னங்கள், தலங்கள் என்பன பராமரிக்கப்பட்டன.

- சந்தகிரி தூபி மற்றும் வெளிப்புற மதில்.
- சந்தகிரி தூபியின் மேல் மாடம்
- சந்தகிரி தூபியின் கீழ் மாடம்
- சந்தகிரி தூபி வளவில் வாகனத் தரிப்பிடம், பாதைகள்
- பொஹொய கெய (பௌர்ணமி இல்லம்), போதி விருட்ச மாடம், கிரியை மண்டபம் ஆகியவற்றைப் பேணிப் பாதுகாத்தல்
- நகர மத்தியிலுள்ள கட்டிடங்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றைப் பராமரித்தல்

தொழில்நுட்ப ரீதியான பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் பின்வரும் இடங்கள் பராமரிக்கப்பட்டன.

- சந்தகிரி தூபி மற்றும் வெளிப்புற மதில்.
- போதி விருட்ச மாடம் பராமரித்தல்
- கிரியை மண்டபம் பராமரித்தல்
- சிலைக்கூடம் பராமரித்தல்
- நகர மத்தியிலுள்ள கட்டிடங்கள் பராமரித்தல்

இதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு வரை புதுப்பித்தல்கள் மேற்கொள்ளப்படாத கதிர்காம நூதனசாலைக் கட்டிடத்தின் உட்புற, வெளிப்புறச் சுவர்கள் புதுப்பிக்கப்பட்டுப் பராமரிக்கப்பட்டன.

இது தவிர, திஸ்ஸமகாராம விகாரைச் சிலைக்கூடத்தில் புத்தர் சிலையை நிறுவுதல், றுஹுணு ஊக்குவிப்பு வலயத்தில் ஞாபகார்த்த பலகையினை அமைத்தல், கதிர்காம சுற்றுலா விடுதியைப் பராமரித்தல், கொம்பத்தல சைலாராமயவில் நில அலங்காரங்கள் அமைத்தல், சித்துல்பவ்வ விகாரையின் நூதனசாலை அமைத்தல் ஆகிய விசேட நடவடிக்கைகள் இக்கருத்திட்டத்தின் மூலம் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

கருத்திட்ட வளவில் நடைபெறும் பராமரிப்பு நடவடிக்கைகளும், பேணிப் பாதுகாத்தல் அறிக்கை தயாரித்தலும் தொடர்ச்சியாக இடம்பெற்றன. 2013 ஆம் ஆண்டின் பேணிப் பாதுகாத்தல் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டன. 2012 ஆம் ஆண்டின் அறிக்கை தயார்படுத்தப்படுகின்றது.

காலி சமுத்திரத் தொல்பொருளியல் கருத்திட்டம்

அகழ்வாராய்ச்சிகள் பிரிவு

சமுத்திரத் தொல்பொருளியல் கருத்திட்டத்தின் மூலம் இவ்வருடத்தில் பின்வரும் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- அரும்பொருட்களின் தரவுகள் தயாரிப்பதற்கான அளவைகளை மேற்கொள்ளல்
- கூடங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் அரும்பொருட்களின் தரவுகள் தயாரித்தல்
- அரும்பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும் அலுமாரிகளை மாதாந்தம் சுத்திகரித்தல்
- அரும்பொருட்களைச் சேதப்படுத்தும் காரணிகளைக் கண்டறிந்து அவற்றினைப் பராமரித்துப் பேணிப் பாதுகாக்கும் பிரிவிற்குச் சமர்ப்பித்தல்
- போத்தல் கண்காட்சிப் பொருட்களின் தாங்கிகளுக்கு சிலிக்கன் பசை உபயோகித்து மறுசீரமைத்து மீண்டும் நீர் நிரப்புதல்
- திறந்த மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள அரும்பொருட்களை பொதுமக்கள் தீண்டாதவாறு பாதுகாப்புக் கவசங்கள் அமைத்தல்

அத்துடன், சமுத்திர தொல்பொருளியல் நூதனசாலையைப் பார்வையிட வருவோருக்கு விசேட சொற்பொழிவுகள், செயலமர்வுகள், கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் ஆகியன வருடம் முழுவதும் நடாத்தப்பட்டன. காலி பொல்பாகொட மகா வித்தியாலயத்தில் ‘‘சமுத்திரத் தொல்பொருளியல் நூதனசாலை’’ என்னும் தலைப்பில் விழிப்புணர்வூட்டும் விசேட சொற்பொழிவு இடம் பெற்றது. காலி ஓபாத மகா வித்தியாலயத்தில் ‘‘இலங்கையின் கலாச்சாரத்தின் மாற்றத்திற்குக் காரணமான அந்நிய நாட்டவர்களின் தாக்கம்’’ என்னும் தலைப்பிலான சொற்பொழிவும், அம்பலாங்கொடை சேனமுல்ல பிக்குகள் பயிற்சிப் பாடசாலை மாணவர்களுக்குத் தெளிவூட்டும் நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

அத்துடன் பாடசாலை மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி, சித்திரப் போட்டி ஆகியவையும் இடம் பெற்றன.

இவை தவிர, கீழ்க் காணும் நடவடிக்கைகளும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

- தியவன்னா வெசாக் வலயத்தில் தற்காலிக புத்தர் சிலையைக் காட்சிக்கு வைப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- உள்நாட்டு, வெளிநாட்டு அரச தலைவர்களை வரவேற்பதும், வழிகாட்டல்களை மேற்கொள்வதும்
- பல்கலைக் கழக மாணவர்களுக்கான கருத்தரங்குகள், பயிற்சிகள் வழங்குதல்
- நிறுவன அங்கத்தவர்களும், ஆய்வாளர்களும் பயன் பெறக் கூடிய நூலகங்களை அமைத்தல் மற்றும் புத்தக விற்பனை.
- துண்டுப் பிரசுரங்கள் தயாரித்தல்
- உல்லாசப் பிரயாணிகளுக்கான வழிகாட்டி நூலுக்கு விளம்பரங்கள் தயாரித்தல்

- நூதனசாலை பற்றிய விபரங்கள் அடங்கிய சுட்டிகள் தயாரித்தல் மற்றும் காட்சிப் பலகைகள் அமைத்தல்
- உல்லாசப் பிரயாண தினத்தையொட்டி நிழற்படம் ஒன்றைத் தயாரித்தல்

அத்துடன் நூதனசாலையைப் பார்வையிட வருவோரின் அபிப்பிராயங்களை அறியும் பொருட்டும், திருப்திகரமான அடிப்படை வசதிகள் கிடைக்கப் பெற்றனவா என்பதை அறியும் பொருட்டும் உல்லாசப் பிரயாணத்துறை ஆய்வுகளை மேற்கொண்டமை இவ்வருடத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளாகும்.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

பாடசாலை மாணவர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சிகள்

சுற்றுலாப் பயணிகளின் கவனத்திற்காக திறந்த வெளி மண்டபத்திலுள்ள அரும்பொருட்களுக்கான அறிவித்தல் பலகைகள்

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை

சுற்றுலாப் பயணிகளுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சி

வடமேல் மாகாண கலாசார சதுக்கம்

யாபஹுவ வேலைத்தளம்

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

யாபஹுவ கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் பிரதேசங்களில் இவ்வருடம் அகழ்வாராய்ச்சிகள் நடாத்தப்பட்டன.

- ட13, ட36, ட37 ஆம் இலக்கக் கற்குகைகளின் அகழ்வுகள்
- நகரின் உட்புற, வெளிப்புற பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சிகள்
- பிட்ட திய அகழியின் அகழ்வுகள்
- குருகொட மெகாலிதிக் மயானத்தின் அகழ்வுகள்
- நாகொல்ல பதாநகரத் தொகுதியின் அகழ்வுகள்
- குருகொட தூபியின் அகழ்வுகள்
- பொல்பித்திகம மெகாலிதிக் மயானத்தின் அகழ்வுகள்
- குருகொட மெகாலிதிக் மயானம் அமைந்துள்ள மீஓயாப் பிரதேசத்தின் அகழ்வுகள்

இதன் பிரகாரம் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட ட13 ஆம் இலக்கக் கற்குகையின் அகழ்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ட 36, ட 37 ஆம் இலக்கக் கற்குகைகளில் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் ஆரம்ப கட்ட அகழ்வுகள் பூர்த்தி செய்யப்பட்டு பகுப்பாய்வுகள் மேற்கொண்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

அத்துடன் குருகொட மெகாலிதிக் மயானத்தின் அகழ்வுகள் பல வருடங்கள் மேற்கொள்ளப்பட்டு வந்ததுடன், இவ்வருடத்தில் அவை பூர்த்தி செய்யப்பட்டு, பகுப்பாய்வுகள் மேற்கொண்டு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன.

அத்துடன் புராதன ராஜதானியாக விளங்கிய யாபஹுவ நகரத்தின் உட்புற, வெளிப்புறப் பிரதேசங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டும் பொருட்டு மேற்கொண்ட அகழ்வாராய்ச்சிகள் பூர்த்தி செய்யப்பட்டன.

அத்துடன் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட நாகொல்ல பதாநகரத் தொகுதியின் அகழ்வுகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன. அங்குள்ள கட்டிடங்களிலிருந்து அக்கால கட்டத்து கட்டிடக் கலைத் தொழில்நுட்பம், கலாச்சாரம் தொடர்பான பல தகவல்கள் கண்டறியப் பட்டன.

இவை தவிர, மீஓயாப் பிரதேசத்தில் மேற்கொண்ட அகழ்வுகளில் இருந்து தொல்பொருளியல், மானிடவியல் சான்றுகள் பல கண்டறியப்பட்டன. வருடாந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள்,

பயிற்சிப் பட்டறைகள், அகழ்வுகளின் அறிக்கை தயாரித்தல், பகுப்பாய்வு செய்தல் போன்ற நடவடிக்கைகள் தொல்பொருளியல் பிரிவினால் வருடம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இவ்வருடத்தினுள் நாகொல்ல பதாநகரத்தின் முதற் கட்ட, இரண்டாம் கட்டப் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டன. அதன் பராமரிப்பு வேலைகள் வருடம் முழுவதும் இடம் பெற்றன.

2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாபஹுவ மாளிகைத் தொகுதியின் பிட்ட திய அகழியின் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

அத்துடன் கடவல டெம்பிட்ட விகாரை, குருகொட ரஜமகா விகாரை, ஹாத்திகமுவ போதனா மண்டபமும் சமையலறையும் ஆகிய இடங்கள் இவ் வருடத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

சுவரோவியங்கள் பேணல் பிரிவின் மூலம் நியந்தவன ரஜமகா விகாரையின் 01 ஆம் இலக்கக் கற்குகையின் சுவரோவியங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கடவல டெம்பிட்ட விகாரை, ரத்கல்லேகம டெம்பிட்ட விகாரை, புல்நேவ டெம்பிட்ட விகாரை, ஹாத்திகமுவ குருகொட ரஜமகா விகாரை, அம்பகஸ்வெவ ரஜமகா விகாரை ஆகிய இடங்களிலுள்ள சுவரோவியங்கள் பேணிப் பாதுகாக்கப்பது அடுத்த வருடத்திற்கு பின்போடப்பட்டன.

கட்டிட நிர்மாணம், பராமரிப்பு, மறுசீரமைத்தல் பணிகள் இவ்வருடம் முழுவதும் இடம் பெற்றதுடன், புதிய தொல்பொருளியல் களஞ்சியம் மற்றும் பிரதான களஞ்சியம் அமைத்தல், வாகனத் தரிப்பிடம் அமைத்தல், வரலாற்றுப் புகழ் மிக்க களுதேவதா தேவாலயத்தின் படிக்கட்டுக்கள் அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கையின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள்

பிட்ட திய அகழியின் கட்டுக்களின் மறுசீரமைப்பு

பதாநகரத்தின் மறுசீரமைப்பின் பின்னர்

தம்பதெனியா

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

தம்பதெனியா கருத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் மாளிகாகல ரஜமகா விகாரையின் களிமண் மதிற் கட்டு, பிஹல்பொல விகாரை, களுந்தாவ மற்றும் ருவன்கிரிகந்த ஆகிய பிரதேசங்களில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பிரகாரம் தம்பதெனியா காலகட்டத்தில் நகரத்தின் பாதுகாப்புக் கருதி நிர்மாணிக்கப்பட்டதாகக் கருதப்படும் களிமண் மதிற்கட்டினைக் கண்டறியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் குறிப்பிடத் தக்கன. விஜயசுந்தராராம விகாரையை அண்மித்த பிரதேசத்திலுள்ள மதிற்கட்டு மற்றும் நீர் அகழிகள் மூன்று அமைந்திருக்கும் பிரதேசத்திலுள்ள மதிற்கட்டு ஆகியவற்றின் அகழ்வின் போது அதன் தொழில்நுட்ப முறைகள், கட்டிடக் கலைகள் ஆகியவற்றின் பல தகவல்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தன.

தம்பதெனியா மாளிகாகல மலையுச்சியில் அமைந்திருந்த ''மெதமிதுல'' என அழைக்கப்படும் இடத்திற்கு மேற்குத் திசையில் மேற்கொண்ட அகழ்வின் போது அரச மாளிகை எனக் கருதப்படும் கட்டிடங்கள் சிலவற்றினைக் கண்டறிய முடிந்தது.

இவை தவிர, அநுராதபுர யுகத்தின் போது ஆரண்ய சேனாசனமாக இருந்ததாகக் கூறப்படும் ருவன்கிரிகந்த பிரதேசத்தில் தொல்பொருளியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சம்பிரதாயங்களின் பிரகாரம் மக்கள் வாழ்ந்த பிரதேசமாகிய களுந்தாவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் கண்டி யுகத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட பிஹல்பொல விகாரையை அண்மித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் என்பன இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட திட்டங்களாகும்.

அத்துடன் சுற்றுலாத் துறைத் தகவல்கள் சேகரித்தல், தொல்பொருட்களின் பகுப்பாய்வு, வருடாந்த அறிக்கை தயாரித்தல், ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள் நடாத்துதல் போன்ற பல நடவடிக்கைகள் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இவ்வருடத்தில் சுவரோவியப் பேணல் பிரிவின் மூலம் யட்டத்தாவல புராண விகாரையின் சுவரோவியங்கள் மற்றும் முருதன்கே ரஜமகா விகாரையின் சுவரோவியங்கள், சிலைகள் என்பன பேணிப் பாதுகாக்கப்பட்டன.

குருநாகல் மாவட்டத்திலுள்ள யட்டத்தாவல புராண விகாரையின் சுவரோவியங்கள் பெரும்பாலும் சிதைவுற்று இருந்த காரணத்தினால் அவை பேணிப் பாதுகாக்கப்பட்டன. இது மட்டுமன்றி அங்கு பாதிப்புற்றிருந்த சுவர்களை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளும், பூச்சிகளின் தொல்லையை ஒழிக்கும் நடவடிக்கைகளும், அழிந்து போயிருந்த வர்ணப் பூச்சுக்கள் மீண்டும் செப்பனிடப்பட்டும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

கண்டி யுகத்திற்குரியதாகக் கருதப்படும் முருதன்கே ரஜமகா விகாரையின் மகர தோரணம், சிற்பங்கள், ஓவியங்கள் ஆகிய யாவும் சிதைவுற்றிருந்த காரணத்தினால், எஞ்சியிருந்த பகுதிகளை மறுசீரமைத்துப் பேணிப் பாதுகாக்கப்பட்டன. அதன் பிரகாரம் இவ்விகாரையின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டன.

- பல துண்டுகளாக உடைந்து போயிருந்த மகர தோரணத்தின் பகுதிகளை ஒன்றிணைத்து மீண்டும் தோரணத்தைக் கட்டியெழுப்பியமை
- மகர தோரணத்தின் மத்தியில் அமைந்திருந்த சமாதி புத்தர் சிலையை மீண்டும் நிர்மாணித்தமை
- சுவர்களில் இருந்த சிதைவுகளைச் சீர்படுத்தி சாந்து பூசப்பட்டமையும், உடைந்திருந்த சுவர்களை மீண்டும் கட்டியெழுப்பியமையும்.
- கழன்றிருந்த ஓவியங்கள் மீண்டும் செப்பனிடப்பட்டமை
- மகர தோரணத்தின் மேல் அமைந்திருந்த தேவ விமானத்தை மறுசீரமைத்தல்
- சமாதி புத்தர் சிலையின் இருமருங்கிலும் இருந்த தேவதைகளின் சிலைகளும், நின்ற நிலை புத்தர் சிலையும் மீள்நிர்மாணம் செய்தமை
- கூரைக் கீழ் தட்டுக்களிலிருந்த இடைவெளிகளை நிரப்பி சீர் செய்தமையும், அதன் மீதிருந்த குப்பைகளை அகற்றியமையும்
- செதுக்கு வேலைப்பாடுகளுடன் கூடிய கதவுநிலைகளைச் சீர்படுத்தியமை
- உக்கிப் போயிருந்த மரவேலிகளை அகற்றி மீள்நிர்மாணம் செய்தல்
- சிலைகள், மகர தோரணம், ஓவியங்கள் ஆகியவற்றிற்கு வர்ணம் பூசுதல்

வாஸ்து முறைப்படியான கட்டிடக்கலை மறுசீரமைப்புப் பணிகளின் கீழ் களுந்தாவ புராண விகாரையின் டெம்பிட்ட விகாரை மண்டபம் மிகவும் சிதைவுற்று இருந்ததனால், அவை பேணிப் பாதுகாக்கப்பட்டன. இவ் விகாரையின் பல பகுதிகள் நவீன மயப்படுத்தப்பட்டிருந்த போதும், டெம்பிட்ட விகாரை மண்டபம் முன்னைய தோற்றத்துடன் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு பேணிப் பாதுகாக்கப்பட்டது.

அத்துடன் விஜயசுந்தராராம விகாரை மண்டபத்தின் தெற்கில் அமைந்துள்ள மதிற்கட்டு மற்றும் மேற்குத் திசையில் அமைந்துள்ள பழைமையான கட்டிடம் ஆகியவை பேணிப் பாதுகாக்கும் நடவடிக்கைகளும், பாதைகளைச் சீரமைத்தல் நடவடிக்கைகளும் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

யட்டத்தாவல டெம்பிட்ட விகாரையின் சிற்பங்கள் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும் பின்னரும்

முருதன்கே புராண விகாரையின் மகர தோரணத்தின் சிற்பங்கள் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்

முருதன்கே புராண விகாரையின் மகர தோரணத்தின் சிற்பங்கள் பேணிப் பாதுகாத்தலின் பின்

தாவ டெம்பிட்ட விகாரை பேணிப் பாதுகாத களுந்தலுக்கு முன்னரும், பின்னரும்

பண்டுவஸ்நுவர

அகழ்வாராய்ச்சிப் பிரிவு

இவ்வருடத்தில் பண்டுவஸ்நுவர கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளினுள் PNB 3-2014 எனப்படும் 03 ஆம் இலக்கக் கட்டிடத்தின் அகழ்வுகள் விசேடமானதாகும். இதன் மூலம் பொலொன்னறுவை யுகத்திற்கு உரியதெனக் கருதப்படும் கட்டிடங்களின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் நிக்கசலாநுவர சுற்றுமதிலுக்கு அருகாமையிலுள்ள கட்டிடத்தின் அகழ்வுகளும் இடம்பெற்றன. அங்கு காணப்பட்ட தொல்பொருளியல் சார்ந்த பல சான்றுகள் மூலம் அக்கட்டிடம் அநுராதபுரக் காலகட்டத்திலிருந்து கண்டிய காலகட்டம் வரை தொடர்ச்சியாக இருந்து வந்த கட்டிடம் எனக் கருதப்படுகின்றது.

பண்டுவஸ்நுவர கருத்திட்டத்தின் கீழ் இயங்கும் நாதகனே தொல்பொருளியல் வேலைத்தளத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தடாகத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது, அதன் தொழில்நுட்ப முறையிலான நிர்மாணப் பணிகள் கண்டறியப்பட்டதுடன், மட்பாண்டங்கள், முத்துக்கள் போன்ற பல தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன.

இவ்வருடத்தில் பண்டுவஸ்நுவர இராச்சியத்தின் வரலாற்றுப் புகழ்மிக்க பாரம்பரியக் கைத்தொழில்கள் தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அக்கைத்தொழில்களில் ஈடுபட்டவர்கள் பற்றியும் ஆராயப்பட்டன.

அத்துடன், இக்கருத்திட்டத்தின் மூலம் ஆரம்ப வரலாற்றுக் காலகட்டம் தொடங்கி அந்நிய ஆதிக்கம் வரையிலான காலப்பகுதியினுள் இருந்த தொல்பொருளியல் சார்ந்த சான்றுகளின் தகவல்களைச் சேகரித்து அறிக்கைப்படுத்தும் நோக்குடன், நாதகனே மற்றும் ரிதீகந்த ஆகிய தொல்பொருளியல் சார்ந்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் மற்றும் பண்டாவாவியை அண்மித்த பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகள் ஆகியவற்றின் மூலம் பெருமளவு தொல்பொருளியல் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இந்நடவடிக்கைகளுடன், தொல்பொருட்களின் பகுப்பாய்வுகள், வகைப்படுத்தல், திட்டமிடல் மற்றும் அறிக்கை தயாரித்தல் ஆகியவையும் இடம்பெற்றன.

அகழ்வாராய்ச்சிப் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

நிக்கசலாநுவர சுற்றுமதில் அருகாமையிலுள்ள கட்டிடத்தின் அகழ்வுகளுக்கு முன்னரும், பின்னரும்

நிக்கசலா நுவர 03 ஆம் இலக்கக் கட்டிட அகழ்வுகளுக்கு முன்னரும், பின்னரும்

பாரம்பரியக் கைத்தொழில்கள் பற்றிய ஆய்வுகள்

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

இப் பிரிவின் மூலம் இவ்வருடத்தில், 2012 ஆம் ஆணடு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்ட PNB 01 ஆம் இலக்கக் கட்டிடத்தின் நவீன தொழில்நுட்ப முறையிலான பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் பொலொன்னறுவைக் காலகட்டத்து கட்டிடக் கலைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டன.

அத்துடன், பண்டுவஸ்நுவர டெம்பிட்ட விகாரை, சிலைக்கூடம் ஆகியவை பேணிப் பாதுகாக்கப்பட்டதுடன், டெம்பிட்ட விகாரையின் நிலக்கீழ்த் தளத்திலுள்ள சித்திரங்கள், சிலைகள் ஆகியவையும் பேணிப் பாதுகாக்கப்பட்டன. முன்பகுதியிலுள்ள தோரணம் மற்றும் அங்குள்ள புத்த விகாரையின் கூரை, கட்டிடச் சிதைவுகள், சித்திரங்கள் என்பனவும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன், நிக்கசலாநுவர 02 ஆம் இலக்கக் கட்டிடம், நிக்கசலாநுவர சுற்றுமதில், பண்டுவஸ்நுவர நுழைவாயிலின் 01 ஆம், 02 ஆம் இலக்கக் கட்டிடங்களும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் 01 ஆம் இலக்கக் கட்டிடத்தின் பராமரிப்புகள், அதன் சுற்றாடலில் புவியமைப்பு என்பனவும் பேணிப் பாதுகாக்கப்பட்டன.

இவை தவிர, 03 இலக்கிய செயலமர்வுகள், சமூக சேவை நிகழ்ச்சிகள், சமய நிகழ்ச்சிகள் ஆகியனவும் இவ்வருடத்தில் இடம் பெற்றன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவின் முன்னேற்றத்தை எடுத்துக் காட்டும் புகைப்படங்கள்

PNB 01 கட்டிடத்தின் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

டெம்பிட்ட விகாரை மற்றும் சிலைக்கூடம் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

ஆம் இலக்கக் கட்டிடத்தின் பேணிப் பாதுகாத்தலுக்கு முன்னரும், பின்னரும்

குருநாகல் வேலைத்தளம்
அகழ்வாராய்ச்சிப் பிரிவு

அகழ்வாராய்ச்சிப் பிரிவினரால், இத்திட்டத்தின் கீழ் செரசும்கல தடாகத்தில் ஒன்றரை மீட்டர் ஆழத்தில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு, புராதன மதிற்கட்டு ஒன்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அத்துடன் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்களின் பகுப்பாய்வு, வகைப்படுத்தல், அறிக்கை தயாரித்தல், திட்டமிடல் ஆகியவை வருடம் முழுவதும் இடம் பெற்றதுடன், இவ்வருட அகழ்வுகளின் அறிக்கை தயாரித்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பேணிப் பாதுகாத்தல் பிரிவு

2014 ஆம் ஆண்டில் குருநாகல் கருத்திட்டத்தின் கீழ் பின்வரும் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சொஹொன் கொடெல்லவின்(தகனக் கிரியைக் கட்டிடம்) மதிற்கட்டு பேணிப் பாதுகாத்தல்
- மறலுவாவ ரஜமகா விகாரையின் கூரை பேணிப் பாதுகாத்தல்
- மக்குலான விகாரையின் கற்றள மண்டபம் பேணிப் பாதுகாத்தல்
- ஜாகடுவ ரஜமகா விகாரையின் பேணிப் பாதுகாத்தல்
- வாவியின் கரையில் படிக்கட்டுக்கள் பேணிப் பாதுகாத்தல்

இதன் பிரகாரம், தகனக் கிரியைக் கட்டிடத்தின் மதிற்கட்டு மற்றும் பாதுகாப்புக் கருதி கட்டப்பட்ட கூரை என்பன அதன் சிதைவுகளின் தன்மைக்கு உகந்தவாறு மறுசீரமைக்கப்பட்டு, பேணிப் பாதுகாக்கப்பட்டன.

அத்துடன் மறலுவாவ விகாரையின் சேதமுற்றிருந்த கொங்கிறீட் பகுதிகள் அகற்றப்பட்டு புதிதாக கூரையும், நிலப்பகுதியும் அமைக்கப்பட்டன.

மக்குலான ரஜமகா விகாரையின் கற்றள மண்டபத்தில் போடப்பட்டிருந்த கொங்கிறீட் கற்துண்டுகளை அகற்றி, கற்தூள் இடப்பட்டு மண்டபம் மறுசீரமைத்து பேணிப்

பாதுகாக்கப்பட்டன. அத்துடன் வாவியின் கரையில் படிக்கட்டுக்களில் கற்தட்டுக்கள் போடப்பட்டு மறுசீரமைக்கப்பட்டன.

ஜாகடுவ ரஜமகா விகாரையின் கூரை மறுசீரமைத்தல் நடவடிக்கைகள் போதியளவு மூலப்பொருட்கள் கிடைக்காத காரணத்தினால் அடுத்த வருடத்திற்குப் பின்போடப்பட்டன..

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட றிதீ விகாரைக் கருத்திட்ட அலுவலகத்தின் நிர்மாணப் பணிகள் இவ்வருடத்தில் பூர்த்தி செய்யப்பட்டன.

தொல்பொருளியல் பேணிப் பாதுகாக்கும் பிரிவில் நாளாந்த பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் றிதீ விகாரையைப் பேணிப் பாதுகாத்தல் நடவடிக்கைகள் வருடம் முழுவதும் தொடர்ந்து இடம்பெற்றன.

பட்டலீய மாதிரி உருவமைப்புக் கல்வி நிகேதனம்

இத் திட்டம் பயிற்சிக் கல்வி, உற்பத்தி, விற்பனை ஆகிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. 2014 ஆம் ஆண்டில் இந்த மூன்று பிரிவுகளிலும் காணப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு அமைந்திருந்தது.

01. பயிற்சிக் கல்விப் பிரிவு

ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் நடாத்தப்பட்ட செயன்முறைப் பரீட்சைகளின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டில் இப் பிரிவுகளுக்குப் புதிதாக பின்வரும் எண்ணிக்கயான மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

பயிற்சி நெறி	2014 இல் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை
கற் செதுக்கு வேலைப்பாடு	02
பித்தளை உருக்கு வேலைப்பாடு	03
மரச் செதுக்கு வேலைப்பாடு	03
செரமிக் வேலைப்பாடு	02

இதன் பிரகாரம் ஒவ்வொரு பயிற்சி நெறிக்கும் உரிய கல்வி நடவடிக்கைகள், மாதாந்த விசேட பயிற்சிகள், கல்விச் சுற்றுலா ஆகிய நிகழ்ச்சிகள் வருடம் முழுவதும் இடம்பெறுகின்றன.

02. உற்பத்திப் பிரிவு

இவ் வருடத்தினுள் பின்வரும் செயற்பாடுகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

01. துண்டு வேலை முறையின் பிரகாரம் மாதிரி உருவமைப்புக்களைத் தயாரித்தல்.
02. பெற்றுக் கொண்ட வெளியிட கட்டளைகளைப் பூர்த்தி செய்து விநியோகித்தமை.
03. நிறுவனத்தின், கருத்திட்டங்களின் மற்றும் அமைச்சின் மூலம் பெற்றுக் கொண்ட கட்டளைகளைப் பூர்த்தி செய்து விநியோகித்தமை.

இவை தவிர பின்வரும் விசேட செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

1. நயிகல ரஜமகா விகாரை வாயிற்கடவைத் தோரணத்தின் வேலைப்பாடுகளைப் பூர்த்தி செய்தமை.
2. கொடிகாமம் இராணுவத் தளத்திற்கு இரண்டு சிங்க உருவங்களும், இலச்சினையும் நிர்மாணித்து வழங்கியமை
3. 2014 "தெயட்ட கிருள" எனப்படும் தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சிக்கு காட்சிக் கூடங்கள் அலங்கரித்தமை
4. பாதுகாப்பு அமைச்சிற்கு மாதிரிச் சிங்க உருவம் நிர்மாணித்தமை
5. கொழும்பு இசிபத்தன வித்தியாலயத்திற்கு மாதிரிப் பிரதி உருவங்கள் தயாரித்து வழங்கியமை
6. கொழும்பு சட்டக் கல்லூரிக்கு பிரித் வைபவத்திற்கான தோரணம் நிர்மாணித்தமை

03. விற்பனைப் பிரிவு

இப்பிரிவில் பயிற்சி பெற்ற மாணவர்களாலும் மற்றும் நிரந்தரக் கலைஞர்களாலும் துண்டு வேலை முறைப்படி உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு விற்பனைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன் பிரகாரம் மத்திய கலாசார நிதியத்தின் ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் மாதிரி உருவமைப்பு விற்பனைச் சாலைகளுக்குத் தேவையான உற்பத்திப் பொருட்களைத் தயாரித்து வருடம் முழுவதும் விநியோகித்து வருகின்றனர்.

விற்பனை நிலையங்களின் வருமானம்	- ரூபா 797,801.75
நன்கொடைகளும், சேவைகளும்	- ரூபா 609,883.08
மொத்த வருமானம்	- ரூபா 1,407,684. 83

மத்திய கலாசார நிதியத்தின் வெளியீட்டுப் பிரிவு

வெளியீட்டுப் பிரிவின் கீழ் வெளியீடுகள், அச்சுப் பதிவுகள், பிரச்சாரங்கள், நிழற்படங்கள், ஆவணப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், ஏட்டுச் சுவடிகளின் ஆய்வுகள், பேணிப் பாதுகாத்தல்கள், நிரற் படுத்தல்கள், புத்தக விற்பனைகள் ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதைத் தவிர, இப்பிரிவின் கீழ் இயங்கும் நூலகமும் அமைந்துள்ளது.

இதன் பிரகாரம் இவ்வருடத்தில் ஜனவரி தொடக்கம் செப்டம்பர் வரையான காலப்பகுதியினுள் பின்வரும் முறையில் நூல்கள் வெளியிடப்பட்டன.

1. கையெழுத்துப் பிரதிகள் தட்டச்சுப்பதிவு வசமிருக்கின்ற நூல்கள் - 03
2. திருத்தங்கள் மற்றும் செவ்வை பார்த்தலில் உள்ள நூல்கள் - 15
3. அச்சுப் பதிவுக்காக இறுதியாக முடிவுறுத்தப்பட்ட நூல்கள் - 50

இதன் பிரகாரம் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் 56 நூல்களின் அச்சுப் பதிவுகள் முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், மொத்த வருமானமாக ரூபா 3,503,719.61 பெறப்பட்டது.

அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்கான நுழைவுச் சீட்டுகள், துண்டுப் பிரசுரங்கள், பதாகைகள் மற்றும் வவுச்சர் உறுதிச் சீட்டுப் பத்திரங்கள், அழைப்பிதழ்கள் ஆகியனவும் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டு வருகின்றன.

இவை தவிர, பிரச்சாரப் பிரிவின் கீழ் பின்வரும் செயற் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 67 உத்தம லங்கா நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.
- இலத்திரனியல் அச்சுப் பதிவு மற்றும் ஊடகப் பிரச்சாரங்கள் தொடர்பான 06 ஊடகவியல் கலந்தாலோசனைகள் நடைபெற்றன.
- ஊடகத் துறை ஆய்வுகளுக்கான 06 சுற்றுலாக்கள் மேற்கொண்டமை
- சித்தம்கல்லென விகாரையின் வருடாந்த பெரஹர ஊர்வலத்தில் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொண்டமை மற்றும் வெளியீடுகள் தயாரித்தமை

இவற்றைத் தவிர, புகைப்படங்கள் பிரிவினால், புகைப்படக் கலைஞர் திரு. காமினி ஜயசிங்க அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட புகைப்படங்களுக்கான பெயர்ப் பலகைகள் தயாரிக்கப்பட்டமையும், நூலகப் பிரிவினால், சகல நூல்களினதும் சுட்டிகளைத் தயாரித்து ஒழுங்கமைத்தல், வகைப்படுத்தல், ஏட்டுச் சுவடிகளின் ஆய்வறிக்கைகளை ஆவணப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மத்திய கலாசார நிதியம்
2014 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமை

	2014 (ரூ)	2013 (ரூ)
சொத்துக்கள்		
நடைமுறைச் சொத்து		
நிதி மற்றும் வங்கி	57,339,782	76,765,504
பெறப்பட வேண்டியவை	61,975,675	70,489,618
தொகை	104,333,735	75,879,357
முதலீடுகள்	400,357,590	150,000,000
	624,006,782	**373,134,479**
நடைமுறையல்லாத சொத்து		
பெற்றுக் கொள்ளப்பட வேண்டியவை	213,423,009	194,307,192
வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள்	676,432	676,432
ஆதனங்கள், இயந்திரங்கள்,பொருட்கள்	963,042,104	962,176,003
சன்மானங்களுக்காக ஒதுக்கப்பட்டவை	598,461,894	398,461,894
	1,775,603,439	**1,555,621,521**
மொத்தச் சொத்துக்கள்	**2,399,610,221**	**1,928,756,000**
பொறுப்புக்கள்		
நடைமுறைப் பொறுப்புக்கள்		
சேர்ந்து திரண்ட கொடுப்பனவுகள்	101,934,369	124,496,229
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்		
சன்மானங்களுக்காக ஒதுக்கப்பட்டவை	439,029,478	425,353,599
விசேட உதவி கருத்திட்டங்கள்	8,803,143	8,803,143
வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள்	5,416,638	1,969,612
மொத்தப் பொறுப்புக்கள்	**555,183,627**	**560,622,582**
தேறிய சொத்துக்கள்	**1,844,426,594**	**1,368,133,418**
மூலதன பங்களிப்பு		
திரட்டிய நிதியங்கள்	19,944,705	19,944,705
ஒதுக்கீடுகள்	16,064,386	16,064,386
சொத்துக்களின் உண்மை ஒதுக்கீடு	444,422,000	447,395,000
வெளிநாட்டுதவி நிதி	286,249,551	303,121,881
திரட்டிய மேலதிகம் / குறைபாடுகள்	1,077,745,952	581,607,446
	1,844,426,594	**1,368,133,418**

மத்திய கலாசார நிதியம்
2014 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு வருட இறுதி
வருமானங்கள் செலவினங்களின் கணக்கு

	2014 (ரூ)	2013 (ரூ)
வருமானங்கள்		
நுழைவுச் சீட்டு விற்பனை	2,200,143,813	1,748,439,894
பிரதி உருவங்களின் விற்பனை	8,032,135	(1,152,741)
வெளியீடுகளின் விற்பனை	5,132,748	1,893,075
அச்சகத்தின் வருமானங்கள்	3,063,186	1,245,586
முதலீடுகள்	76,483,229	53,063,839
ஏனைய வருமானங்கள்	16,417,830	15,267,732
	2,309,272,941	**1,818,757,385**
செலவினங்கள்		
சம்பளங்கள், வேதனங்கள், ஊழியர் கொடுப்பனவுகள்	1,029,707,694	919,234,392
சன்மானங்கள்	22,511,527	66,949,750
நிலையான சொத்துக்களின் தேய்மானங்கள்	53,880,089	42,359,757
விற்பனை ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள்	67,740,761	17,162,616
வழங்கல் மற்றும் பாவனைப்பொருட்கள்	196,845,975	136,839,850
சொத்துக்கள், பொருட்களின் புதுப்பித்தல்கள்	72,421,815	37,778,087
ஒப்பந்த சேவைகள்	58,689,460	40,732,730
மொத்த நிதிச் செலவினங்கள்	334,158	135,429
கணக்காய்வுக் கட்டணங்கள்	300,000	250,000
நன்கொடைக் கொடுப்பனவுகள்	26,886,775	22,316,300
ஏனைய செலவுகள்	300,491,716	232,929,384
	1,829,809,970	**1,516,688,295**
வருடத்திற்கான மேலதிகம் / குறைபாடுகள்	479,462,971	302,069,090

மத்திய கலாசார நிதியம்
2014 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு வருட இறுதி
நிதிப் பிரவாகக் கூற்று

<u>செயல்முறை நிகழ்ச்சித் திட்டங்களால் ஈட்டிய நிதி வளங்கள்</u>		
வருடத்திற்கான மேலதிகம் / குறைபாடுகள்		479,462,969
<u>ஒப்பீடுகள் - நிதி தொடர்பற்ற திட்டங்கள்</u>		
தேய்மானங்கள்	53,880,089	
முன்னைய வருடத்தினுடன் ஒப்பிடுகை	16,675,536	
நிலையான சொத்துக்களை அகற்றியதனால் ஏற்பட்ட இலாபம்	(131,910)	
சன்மானங்களுக்கான ஒதுக்கீடு	22,651,042	93,074,757
செயற்படு மூலதனத் திட்டங்களின் ஒப்பீட்டுக்கு முன்னரான பெறுபேறு		572,537,726
செயற்படு மூலதனத்தின் வேறுபாடுகள்		
பெற்றுக்கொள்ளப்பட வேண்டியவை	8,513,943	
தொகை	(28,454,378)	
சேர்ந்து திரண்ட கொடுப்பனவுகள்	(22,561,860)	(42,502,295)
செயல்முறை நிகழ்ச்சித் திட்டங்களால் ஈட்டப்பட்ட தேறிய நிதி		**530,035,431**
<u>முதலீடுகளால் ஏற்பட்ட நிதிப் பிரவாகம்</u>		
நிலையான சொத்துக்களின் கொள்வனவு	(74,591,520)	
நிலையான சொத்துக்கள் அகற்றுதல்	131,910	
முதலீடுகள் (கூடுதல் / குறைதல்)	(450,357,590)	
நீண்ட கால முதலீடுகள் (கூடுதல் / குறைதல்)	(19,115,817)	
முதலீட்டுத் திட்டங்களால் ஈட்டப்பட்ட தேறிய நிதி		**(543,933,017)**
<u>நிதி நடவடிக்கைகளால் ஈட்டிய நிதி</u>		
வெளிநாட்டுச் செலாவணி நிதி		
சன்மானக் கொடுப்பனவுகள்	(8,975,163)	
விசேட உதவி கருத்திட்டங்கள்		
வெளிநாட்டு உதவி கருத்திட்டங்கள்	3,447,027	
நிதி நிகழ்ச்சித் திட்டங்களின் பாவனை		**(5,528,136)**
தேறிய நிதிக் குறைப்பு - நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சம தொகை		**(19,425,722)**
வருட ஆரம்பத்திலிருந்த நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சமதொகை		76,765,504
வருட இறுதியிலிருந்த நிதி மற்றும் பணம் ஆகியவற்றின் சமதொகை		**57,339,782**

மத்திய கலாசார நிதியம்

2014 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு வருட இறுதியில் அத்தியாய மாற்றங்கள் பற்றிய கூற்று

	திரட்டிய நிதி	மூலதன ஒதுக்கம்	உள்ளபடி ஒதுக்கம்	வெளிநாட்டு ஒதுக்கம்	ஒதுக்கங்களின் மேலதிகம்	மொத்தத் தொகை
2013.01.01 ஆந் திகதிக்கு மீதி	19,944,705	16,064,386	451,428,000	303,121,881	267,321,584	1,057,880,556
கூட்டப்பட்டது						
வருடத்திற்கான மேலதிகம்					302,069,092	302,069,092
முன்னைய வருடத்துடன் ஒப்பீடு			(4,033,000)		12,216,770	8,183,770
2013.12.31 ஆந் திகதிக்கு மீதி	**19,944,705**	**16,064,386**	**447,395,000**	**303,121,881**	**581,607,446**	**1,368,133,418**
கூட்டப்பட்டது						
உள்ளபடியான மேலதிகம்			2,200,000			2,200,000
வெளிநாட்டு நிதியம்				4,300,000		4,300,000
வருடத்திற்கான மேலதிகம்					479,462,969	479,462,969
முன்னைய வருடத்துடன் ஒப்பீடு			(5,173,000)	(21,172,330)	17,310,412	(9,034,918)
	19,944,705	16,064,386	444,422,000	286,249,551	1,078,380,827	1,845,061,469
கழிக்கப்பட்டது						
முன்னைய வருடத்துடன் ஒப்பீடு					(634,875)	(634,875)
2014.12.31 ஆந் திகதிக்கு மீதி	**19,944,705**	**16,064,386**	**444,422,000**	**286,249,551**	**1,077,745,952**	**1,844,426,594**

මගේ අංකය / எனது இல. / My No. ரீஎம்/ஏ/சீசீஎவ்/1/14/25	මබේ අංකය / உமது இல. / Your No.	දිනය / திகதி / Date 2015 திசெம்பர் 14

பணிப்பாளர் நாயகம்
மத்திய கலாசார நிதியம்

மத்திய கலாசார நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச் சட்டத்தின் 9 (4) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

மத்திய கலாசார நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசிலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(4) பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் எனபவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன்.

1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் நிதி நிலைமைக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நான் நிர்ணயிக்க முடியாதுள்ளேன்.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 தொடர்புடைய தரப்பினருடன் ஏற்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள தனியார் கம்பனியான வரையறுக்கப்பட்ட கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாணக் கம்பனி, மத்திய கலாசார நிதியத்தின் சில நிர்மாணங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒப்பந்த அடிப்படையில் நிறைவேற்றுகின்றன. மீளாய்வாண்டினுள் மத்திய கலாசார நிதியத்தின் செயற்திட்ட வேலைத்தளங்களின் அகழ்வு / பாதுகாப்பு உதவியாளர்களாக தொழிலாளர்கள் இக் கம்பனியால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு அதற்காக ரூபா 142 மில்லியன் நிதியத்தினால் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்தது.

கம்பனியின் பணிப்பாளர் சபையினுள் நிதியத்தின் பணிப்பாளர் பதவி வகிக்கும் இரு உத்தியோகத்தர்கள் உள்ளடங்கியிருந்ததுடன், நிதிய பதவியணியின் கணக்காளரொருவர் கம்பனியின் கணக்காளராக மீளாய்வாண்டின் போது செயற்பட்டிருந்தார். மத்திய கலாசார நிதியத்திற்கும் கலாசார பாதுகாப்பு மற்றும் நிர்மாண தனியார் கம்பனிக்குமிடையில் நிலவிய இந்த தொடர்பின் தன்மை மற்றும்

கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3

தவறுகளின் திருத்தத்திற்காக கணக்குகளில் மேற்கொள்ளப்படும் முன்னைய காலப்பகுதிகளுக்குரிய வழுக்களின் சீராக்கங்கள் முன்னைய வருடத்தின் ஒப்பீட்டுத் தகவல்களின் மீள் கூற்றொன்றாக செய்யப்பட்டு குறிப்புகளாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டுமெனினும், முன்னைய ஆண்டின் ஒப்பீட்டுத் தகவல்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 44,290,617 தொகையான சீராக்கங்கள் உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றிக்கு சீராக்கப்பட்டிருந்ததெனினும் அது தொடர்பான தகவல்கள் குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7

(i) தற்போது பாவனையிலுள்ள முழுமையாக தேய்விடப்பட்டுள்ள நிலையான சொத்துக்கள் மற்றும் பாவனைக்கு எடுக்க முடியாத கைதவிர்ப்பிற்காக உள்ள சொத்துக்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டுமெனினும், 1982 ஆம் ஆண்டிலிருந்து காணப்படும் ரூபா 963 மில்லியன் கூட்டுத்தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களில் உள்ளடங்கியுள்ள முழுமையாக தேய்விடப்பட்டுள்ளதும், பாவனையிலுள்ளதுமான சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், 2013 ஆம் ஆண்டினுள் ஏலமிடப்பட்டிருந்த மற்றும் பாவனைக்குதவாது அழிக்கப்பட்டிருந்த 758 பொருள் வகைகளுக்குரிய 6,984 அலகுகள் இனங்காணப்படாத சொத்துக்களாக (Derecagnition) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிலையான சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் போது ஒத்த தொகுதியிலான நிலையான சொத்துக்கள் அனைத்தும் மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான

முழுமையாக தேய்விடப்பட்டிருந்த 98 வாகனங்களில் 39 வாகனங்கள் மற்றும் காணி மற்றும் கட்டிடங்களின் ஒரு பகுதி மாத்திரம் ரூபா 461,115,000 தொகைக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(iii) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் உரித்து தொடர்பில் நிலவும் தடைகள் மற்றும் வறையறைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டுமெனினும் நிதியத்திற்கு உரித்தற்ற மத்திய கலாசார நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 4,064,443 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அதன் உரித்திற்குள்ள வரையறைகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

2.2.3 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐயக்கடன் ஒதுக்கம் தொடர்பில் நிதியத்தினால் பின்பற்றப்படுகின்ற கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. கடனை அறவிடும் இயலுமை தொடர்பாக மீளாய்வு செய்யாமல் முன்னைய இரு ஆண்டுகளில் ஐயக்கடன்களாக ஒதுக்கப்பட்ட தொகைக்கு சமனான தொகையொன்று அதாவது ரூபா 1,964,833 மீளாய்வாண்டிலும் ஐயக்கடன் ஏற்பாடாக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) பாரம்பரிய சொத்துக்கள், நிதியத்திற்கு உரித்தற்ற சொத்துக்களாகவும் அவை தொல்பொருளியல் ஆணையாளரின் கீழ் நிதியத்தினால் பெறுப்பேறகப்பட்டுள்ளதாகவும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பாரம்பரிய சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மூலதன செலவினங்கள் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 11,893,792 தொகையும், முன்னைய ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 48,339,812 தொகையும் கட்டிடங்கள், வீதி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டின் மொத்த செலவினம் ரூபா 1,829,809,971 ஆகும். இந்த செலவினத்திற்கு ரூபா 66,119,386 தொகையான அட்டுறு செலவினங்கள் சீராக்கப்பட்டிருந்ததெனினும், அட்டுறு செலவின கணக்கிற்கு முன்னைய ஆண்டின் அட்டுறு செலவினங்களை தீர்ப்பது தொடர்பில் செய்யப்பட்ட தவறான சீராக்கங்களின் காரணமாக ஆண்டின் செலவினங்கள் மற்றும் அட்டுறு செலவினம் ரூபா 28 மில்லியனால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான சொத்துக்களின் விற்பனை மூலம் பெறப்பட்ட ரூபா 131,910 தொகை காசு வெளிப்பாய்ச்சலொன்றாகவும், தொழிற்படு மூலதனத்திலான மாற்றமாக சீராக்கப்பட வேண்டிய ரூபா 8,513,943 தொகை முதலீட்டுச் செயற்பாடாகவும், முதலீட்டு செயற்பாடுகளாக காட்டப்பட வேண்டிய ரூபா 19,115,817 தொகை செயற்படு மூலதன முரண்களாகவும், காசாக கிடைக்கப்பெற்றிராத வெளிநாட்டு உதவி சீராக்கங்கள் ரூபா 23,921,939 காசாக பெறப்பட்ட வெளிநாட்டு உதவியாகவும், பெறப்பட்ட வெளிநாட்டு உதவி ரூபா 3,447,027 தொகை காசு வெளிப்பாய்ச்சல்களாகவும் தவறான முறையில் காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கப்பட்டிருந்தது. இதனால் நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்று கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வெளிநாட்டு உதவி மானியமொன்றாக 1984 ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் கிடைக்கப்பெற்றிருந்த 21 வாகனங்களில் 10 வாகனங்களின் நியாயப்பெறுமதியினை மதிப்பிட்டு கணக்கு வைப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வாகனங்களின் காப்புறுதிப் பெறுமதி ரூபா 5,460,000 ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) சுனாமி நூதனசாலையொன்றை நிர்மாணிப்பதற்காக 2005 ஆம் ஆண்டில் ரூபா 2,558,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த காலி நுககஹவத்தயிலுள்ள காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீள் மதிப்பீடு செய்யப்பட்ட கட்டிடங்களுக்குரிய 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளுக்கான பெறுமானத் தேய்வு ரூபா 2,100,000 தொகை சொத்து மீள்மதிப்பீடு ஒதுக்கத்திற்கு வரவு வைப்பதற்கு பதிலாக வெளிநாட்டு வளங்கள் நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் வெளிநாட்டு வளங்கள் நிதியத்தின் மீதி அப் பெறுமானத்தினால் குறைவாகவும் சொத்து மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் அப் பெறுமானத்தால் அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளளிப்பு செய்யும் அடிப்படையில் கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிற்கு மீளாய்வாண்டினுள் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,000,000 தொகை பெற வேண்டிய தொகையொன்றாக கணக்கு வைப்பதற்கு பதிலாக ஆண்டின் வருமானத்திற்கெதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் காப்புறுதிச் செலவினமாக நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,342,446 தொகை காட்டப்பட்டிருந்ததெனினும் மோட்டார் வாகன காப்புறுதிக்காக செலவிடப்பட்ட செலவினம் ரூபா 2,293,842 தொகை ஆகும். ஊழியர் வைத்திய உதவி காப்புறுதி நட்டஈட்டுப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளும் காப்புறுதிக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் மோட்டார் வாகனங்களுக்காக ஏற்பட்ட உள்ளபடியான வருடாந்த காப்புறுதிச் செலவினம் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) முழுமையாக தேய்விடப்பட்ட ரூபா 5,067,106 கிரயமான வெளிநாட்டு உதவிகளின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றிருந்த வான் வண்டியொன்று மீண்டும் மீள்மதிப்பிடப்பட்டு ரூபா 4,300,000 என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததெனினும், அந்த வாகனத்தின் மொத்தப் பெறுமதி மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமானம் கணக்குகளிலிருந்து அகற்றப்படாத காரணத்தால் மோட்டாார் வாகனக் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வு ரூபா 5,067,106 தொகையினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது. அவ்வாறே அந்த வாகனத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி மீது மீளாய்வாண்டில் பெறுமானத் தேய்வுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 860,000 பெறுமானத்திற்குரிய காலக்கழிவு வெளிநாட்டு வளங்கள் நிதியக் கணக்கில் பதிவு செய்வதற்குப் பதிலாக மீள்மதிப்பீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டமையின் விளைவாக வெளிநாட்டு வளங்கள் நிதியக் கணக்கு ரூபா 860,000 கூடுதலாகவும், சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்க கணக்கு அப் பெறுமானத்தினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த உருவச்சிலைகளின் கிரயம் ரூபா 4,278,305 தொகைக்கான உருவச்சிலை உப உற்பத்திகளுக்குரிய ஊழியம், பொது மேந்தலை மற்றும் உற்பத்தி மூலப்பொருள்கள் கிரயமானது அந்தந்த கணக்குகளுக்கு செலவு வைப்பதற்குப் பதிலாக மொத்தக் கிரயம் உற்பத்தி மூலப்பொருள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையின் காரணத்தால் உற்பத்தி மூலப்பொருள் கணக்கு ரூபா 2,032,503 இனால் குறைவடைந்திருந்ததுடன் கூலி ரூபா 542,242 இனாலும் பொது மேந்தலைச் செலவினம் ரூபா 1,490,261 இனாலும் அதிகரித்திருந்தது.

(ஒ) மோட்டார் வாகனங்களை மேம்படுத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,479,575 செலவினமொன்று தவறாக பதியப்பட்டமையின் காரணத்தால் மோட்டார் வாகனக் கணக்கு மற்றும் அட்டுறு செலவினக் கணக்கு அப் பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஓ) 02 செலவின விடயங்களுக்குரிய ரூபா 2,370,698 தொகையான செலவினம் உரிய முறையில் வகைப்படுத்தப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காண்பிக்கப்படுகின்ற ஒவ்வொரு கணக்கு விடயங்களுக்கெதிரேயும் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அந்த விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று உறுதிப்படுத்த முடியவில்லை.

	விடயம்	பெறுமதி	சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்
		ரூபா	
(அ)	விசேட நிதிய செயற்திட்டங்கள் (10 செயற்திட்டங்களுக்குரியது)	8,803,143	ஒவ்வொரு நிதியத்திற்கும் உரிய தகவல்கள் உள்ளடங்கிய கோவைகள் மற்றும் ஆதார ஆவணங்கள்
(ஆ)	வெளிநாட்டு நிதிய செயற்திட்டங்கள் (03 செயற்திட்டங்களுக்குரியது)	1,969,612	- மேற்படி -

(இ)	திரண்ட இலாபம் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த சீராக்கங்கள்	59,331,279	சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்ட முறைமை மற்றும் சீராக்கங்களின் விபரம்
(ஈ)	கஹவில்கொட புராதன விகாரையின் தேசிய தொல்பொருளியல் பூங்கா நம்பிக்கைப் பொறுப்பிற்கான கொடுப்பனவுகள்	30,500,000	கிரய மதிப்பீடு, அளவீட்டுப் பத்திரம், நிர்மாணங்களுக்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள், பற்றுச்சீட்டுக்கள், சிட்டைகள், திட்டங்கள், செய்வேலை அறிக்கைகள், பொறியியலாளர் சான்றிதழ்
(உ)	கடன்பட்டோர்	950,463	பட்டோலைகளும் காலப்பகுப்பாய்வும்
(ஊ)	நேரடியாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த விமானத்தில் மேற்கொள்ளப்பட்ட மேல்தளத்தின் படப்பிடிப்புக்கான விமானக் கட்டணங்கள்	2,297,740	விமானப்படையால் வழங்கப்பட்ட விலைப்பட்டியல், பற்றுச்சீட்டு அல்லது சிட்டை

2.3 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம் கலாசார நடவடிக்கைகள் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் உத்தியோகபூர்வமாக நிதியத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராவார். இந்த பதவிக்காக படியொன்றைச் செலுத்துவதற்காக அதிகாரச்சட்டத்தின் ஊடாக நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், நிதியத்தினால் செயலாளரின் மாதாந்த சம்பளத்தில் 33 1/3 சதவீதத்தில் கணிப்பிடப்பட்டு மாதாந்தப்படி ஒன்று செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 241,356 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே இதற்காக தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு மற்றும் 1999 மே 04 ஆந் திகதிய 374 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் தாபனப் பணிப்பாளரினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் 09 பல்வேறு வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 152,252 தொகையும் 06 முற்பண மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா 166,407 தொகை மற்றும் 08 நிதி மோசடிகளின் பெறுமதியான ரூபா 1,472,848 தொகையுமாக ரூபா 1,791,507 கூட்டுத்தொகை அறவிடமுடியாக் கடனாக கணக்குகளிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) பணிப்பாளர் சபையின் அங்கீகாரமொன்றோ பாதீட்டு மதிப்பீடொன்றோ இல்லாமல் வெகுமதியாக ரூபா 4,618,938 தொகையும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி செலவினத்திற்காக ரூபா 1,299,000 தொகையும் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) 2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிறுவனத்திற்குரிய வளங்கள் வரிசை அமைச்சிற்கோ அல்லது எந்தவொரு அரச நிறுவனமொன்றிற்கோ வழங்கப்படக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்ததெனினும், மீளாய்வாண்டினுள் கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் டவர் மண்டப திரையரங்கு மன்றம் போன்றவற்றிற்கு ரூபா 1,000,000 வீதம் ரூபா 3,000,000 தொகை மத்திய கலாசார நிதியத்திலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த 6 வருடங்களை விட பழமையான ரூபா 1,458,653 தொகையான விழா மற்றும் விசேட முற்பணம் மற்றும் இடர்கடன் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியிலும் அறவிடப்படாது காணப்பட்டது.

(ஆ) 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்ட ரூபா 153,784 தொகையான 05 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா 75,300 தொகையான கடன்பட்டோர் மீதி என்பன அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்தும் கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(இ) கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலவிவரும் ரூபா 772,577 தொகை மற்றும் 05 வருடங்களை விட பழமையான ரூபா 20,598 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 02 செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்டு 2 வருடங்கள் கடந்திருந்த ரூபா 1,025,420 முற்பணம் தீர்க்கப்பட்டிராததுடன் சீகிரிய செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 343,329 முற்பணத் தொகையும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பதவியணிக்கு வழங்கப்பட்டிருந்த 2 வருடங்களை விஞ்சியிருந்த ரூபா 79,924 தொகையான முற்பண மீதியொன்று 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படுவதுடன் 8 வருடங்களுக்கும் அதிகமான காலமாக நிலவிவரும் ரூபா 44,534 தொகையான நீதிமன்ற வைப்புக்களும் தொடர்ந்தும் அறவிடப்படாமலிருந்தன.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான இனங்காணப்படாத 05 வருடங்களை விட பழமையான ரூபா 397,019 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை	
(i) XLVII ஆம் அத்தியாயத்தின் 1 : 11 ஆம் பிரிவு	அரச சொத்துக்கள் தனிப்பட்ட அலுவல்களுக்காக பயன்படுத்தப்படக் கூடாதெனினும் மத்திய கலாசார நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் பிரத்தியேக சுற்றுலாவொன்றிற்காக விமானப்படையின் விமானமொன்று பயன்படுத்தப்பட்டு அதற்காக நிதியத்திலிருந்து ரூபா 850,067 செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) XLVII ஆம் அத்தியாயத்தின் 8.1 மற்றும் 8.2 ஆம் பிரிவுகள்

தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் ஏற்பாடுகள் மற்றும் திறைசேரி சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக செயற்படும் உத்தியோகத்தர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனினும், யாப்பகூவ செயற்திட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 1,163,525 செலவிடப்பட்டு சட்டவிரோத பலகைகளை கொள்வனவு செய்தமையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

(i) நிதிப் பிரமாணம் 396(ஈ)

வழங்கப்பட்டு கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களைக் கடந்திருந்த ரூபா 110,908 கூட்டுத்தொகையான 07 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 751

பெறப்படும் அனைத்து பொருட்களும் உடனடியாக பொருட் பதிவேட்டுப் புத்தகத்தில் அல்லது களஞ்சிய அட்டைகளில் குறிப்பிடப்பட்ட வேறுபாட்டுப் பதிவுகள் புத்தகங்களில் உள்ளடக்கப்பட வேண்டுமெனினும், சீகிரிய செயற்திட்டத்தின் “மெட்டிகலய” கண்காட்சிக்காக நடாத்தப்பட்ட நிகழ்வின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 570,455 பெறுமதியான 07 உருப்படிகள் பொருட்பதிவேட்டு புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவை**

(i) 5.3.13(அ), 5.4.6 மற்றும் 8.12.2 ஆம் பந்திகள்

கொள்வனவு வழிகாட்டியினைப் பின்பற்றாது சீகிரியா நூதனசாலையின் வர்ணம் பூசுவதற்கான ஒப்பந்தம் ரூபா 1,397,000 தொகைக்கு ஒப்பந்ததாரரொருவருக்கு கையளிக்கும் போது அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. மீள செலுத்தப்படும் பிணை வைப்புத் தொகை மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 01 சதவீதமாக இருக்க வேண்டுமெனினும், இந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த பிணை வைப்பு ரூபா 4,000 ஆகும். மேலும், ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது நிறைவேற்றப்பட்ட வேலைகளின் பெறுமதியில் 10 சதவீதத்திற்கு குறையாத தொகையினை பிடிகாசாக நிறுத்தி வைக்கப்பட்டிராததுடன் உரிய நியமத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக கண்காணிப்பு உத்தியோகத்தரொருவரின் சான்றிதழொன்று இல்லாமல் அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 4.3.1 , 5.2.1 , 5.3.1 ஆம் பிரிவுகள்

சீகிரிய செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமையாளருக்கு கொள்வனவு செய்யக்கூடிய ஆகக்கூடிய எல்லை ரூபா 2 மில்லியன் எனினும் செயற்திட்டத்தின் தூய்மைப்படுத்தல் சேவையினை பெற்றுக்கொள்வதற்காக கிரய மதிப்பீடொன்றினை தயாரிக்காமல் கேள்வி கோரப்பட்டதுடன் ரூபா 3,468,000 தொகைக்கு ஒப்பந்தக் கையளிப்பு அவரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் அனைத்து

		முக்கிய தகவல்களும் விலைமனுப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிராததுடன் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி	சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பல்வேறு வெளித்தரப்பினருக்கு ரூபா 5,917,937 கிரயமான உருவச் சிலைகளின் உற்பத்தி, வெளிப்படுத்தப்பட்ட இருப்பு மற்றும் அச்சிடப்பட்ட பொருட்கள் என்பன நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது.
(உ)	1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை	திறைசேரிச் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதி விளைவு ரூபா 479,462,969 மிகையாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 302,069,090 ஆனமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 177,393,879 அதிகரிப்பொன்றினைக் காட்டியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதியத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 313,121,676 இனால் அதிகரித்திருந்த போதிலும் சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களின் விற்பனை வருமானம் உள்ளடங்கலான ஏனைய வருமானங்கள் ரூபா 490,515,555 இனால் அதிகரித்திருந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

4. பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 47.3 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயம் கொண்ட 28 அகழ்வு மற்றும் பாதுகாப்பு வேலைத்தளங்கள் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 11 செயற்திட்டங்களின் கீழ் 24 அகழ்வு மற்றும் பாதுகாப்பு வேலைகளின் 19,422 வேலைக் கூறுகள் மீளாய்வாண்டினுள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டு அதற்காக ரூபா 88,744,470 மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவற்றில் 2,657 வேலைக் கூறுகள் மட்டுமே மீளாய்வாண்டின் இறுதியளவில் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. அதற்கான உள்ளவாறான செலவினம் ரூபா 6,565,697 ஆக இருந்ததுடன் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் முறையே 7 சதவீதம் மற்றும் 14 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் 301 அகழ்வு மற்றும் பாதுகாத்தல் வேலைத்தளங்களின் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் 48 வேலைத்தளங்களின் பணிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த மேற்குறித்த 301 வேலைத்தளங்களுக்காக ரூபா 201,722,168 மதிப்பிடப்பட்ட மூலப் பொருட் கிரயம் மற்றும் ரூபா 367,698,199 நேர் கூலிக் கிரயம் என்பவற்றில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு மதிப்பிடப்பட்ட மூலப்பொருள் கிரயத்தில் 24 சதவீதம் அல்லது ரூபா 52,177,452 மற்றும் மதிப்பிடப்பட்ட நேர்க் கூலி கிரயத்தில் 110 சதவீதம் அல்லது ரூபா 402,875,598 உள்ளவாறாக செலவிடப்பட்டிருந்த காரணத்தால் ஒட்டு மொத்த செயலாற்றலில் கூலிக்கான பங்களிப்பு உயர்ந்ததொரு பெறுமதியினைக் கொண்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) நிதியத்தின் பிரதான வருமான வழியான சுற்றுலா நுழைவுச் சீட்டுக்களின் அச்சிடல் விற்பனை மற்றும் இருப்புக் கட்டுப்பாடு தொடர்பில் முறையான உள்ளகக் கட்டுப்பாடு முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமையால் சுற்றுலா நுழைவுச் சீட்டுக்களை முறையற்ற பாவனையில் ஈடுபடுத்தல் இடம்பெற்றிருந்தது. இலத்திரனியல் அடையாளக் குறியீட்டு முறைமை (Bar code system) போன்ற நவீன தொழில்நுட்ப முறைமையொன்றை பயன்படுத்துதல் மூலம் இது தொடர்பான முறையான கட்டுப்பாடொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் விற்பனை செய்வதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 15,968 சுற்று நுழைவுச்சீட்டுக்களும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியின் பின்னர் விற்பனை செய்வதற்கென நிறுத்தி வைக்கப்பட்டிருந்த mini DVD உடன் கூடிய 44,904 வெளிநாட்டு தனிநபர் நுழைவுச்சீட்டுக்களும் 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இரத்துச் செய்யப்படாது களஞ்சியங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த mini DVD உடன் கூடிய வெளிநாட்டு சுற்றுலா நுழைவுச் சீட்டுக்கள் 2014 ஆம் ஆண்டின் போது சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) சுற்றுலா நுழைவுச் சீட்டுக்களை அச்சிடும் போது வழுக்களுடன் கூடிய மற்றும் இரத்துச் செய்யப்படுகின்ற நுழைவுச்சீட்டுக்களை நிறுவகத்திலிருந்து வெளியேற்றுவதற்கான முறையான நடைமுறையொன்று அமுல்படுத்தப்பட்டமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான அவ்வாறான 42,706 நுழைவுச் சீட்டுக்கள் காணப்பட்டதாக இருப்பு மெய்மையாய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) சிகிரியாவில் சுற்றுலா நுழைவுச்சீட்டுக்களின் விற்பனைக்காக நுழைவுச் சீட்டு விற்பனையாளர் பதவியின் உத்தியோகத்தர்களுக்குப் பதிலாக தொழிலாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டினுள் பூர்த்தியாக்கப்பட்டிருந்த அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்ட பொலன்னறுவை கல் விகாரையில் வித்தியாதார கற்குகைக்கு மேலாக கூரையொன்றினை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது 2012 ஆம் ஆண்டில் அந்த பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,427,866 தொகையான 20 சதவீத முற்பணத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பாடையினால் ஒப்பந்தக்காரருக்கு எதிராக நிதியத்தினால் தொடரப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பின் பிரகாரம், ரூபா 4,472,150 தொகையினை நிதியத்திற்கு செலுத்துமாறு 2011 யூன் 30 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றிற்கு கட்டளையிடப்பட்டிருந்ததெனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் அத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ஏனைய கலாசார செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 115.67 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதனை முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 53 மில்லியன் அல்லது 85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. வழங்கப்பட்ட நிதிகள் அதற்காகவே ஈடுபடுத்தப்படுவதனையும் உரிய செயற்பாடுகள் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்ளும் நடைமுறையொன்றில்லாமல் விகாரைகளின் புதுப்பித்தல் மற்றும் ஊர்வலங்களுக்கான அனுசரனை நன்கொடைகளை வழங்குதல் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கான முன்னுரிமைப் பட்டியலொன்று, எடுகோள்கள், திட்டம் அல்லது மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திட்டம் மற்றும் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் சிகிரீயா செயற்திட்டத்திற்காக 40X80 அடி அளவான நடமாடும் கண்காட்சி கூடமொன்று கொள்வனவு நடைமுறைக்கு முரணாக ரூபா 3,176,708 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது நிதியத்தின் தேவைப்பாட்டிற்கு பயன்படுத்தப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

அவ்வாறே வழங்குனருக்கு உத்தியோக பூர்வ கட்டளையொன்று வழங்கப்பட்டிராத காரணத்தால் இக் கொடுக்கல் வாங்கலானது வெளிப்படைத்தன்மையுடன் நிகழ்ந்திருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது. மேலும், இந்தக் கூடம் 5 சந்தர்ப்பங்களில் அரசியல் கூட்டங்களிற்காக வழங்கப்பட்டிருந்தமை தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதியத்தின் வெளியீட்டுப் பிரிவினால் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 1,069,636 செலவிடப்பட்டு அச்சிடப்பட்டிருந்த "மல்வத்து மஹாவிஹாரவங்ச மஹாநாஹிமிவரு" புத்தகத்தின் 998 பிரதிகளில் 901 பிரதிகள் நன்கொடையாக வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றுள் ரூபா 953,884 கிரயமான 890 புத்தகங்கள் கலை மற்றும் கலாசார விடயப்பொறுப்பு அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் இந்த புத்தகம் நிதியத்தின் தேவைப்பாடொன்றின் அடிப்படையில் அச்சிடப்பட்டிருக்கவில்லையென அவதானிக்கப்பட்டது.

(இ) இந்தியாவில் நடைபெற்ற சார்க் நாடுகளின் அமைச்சர்களின் மாநாடொன்றிற்காக மீளாய்வாண்டின் செப்தெம்பர் 24 ஆந் திகதி முதல் 27 ஆந் திகதி வரை பங்குபற்றியிருந்த கலை மற்றும் கலாசார அமைச்சர் உள்ளடங்களான அலுவலர்களின் விமானப் பிரயாணச்சீட்டு, அமைய செலவுகள், உபசரணைப் படிகள் போன்றவற்றுக்காக மத்திய கலாசார நிதியத்திலிருந்து ரூபா 1,718,882 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) சிகிரியா செயற்திட்டத்தின் சிற்றுண்டிச்சாலையை புதுப்பிப்பதற்காக உறுதியான இரட்டைக் கதவுகளைப் பொருத்துவதற்கான ரூபா 1,790,000 பெறுமதியான ஒப்பந்தத்தினை கையளிக்கும் போது போட்டி அடிப்படையிலான விலைமனுக்கள் கோரப்பட்டிருக்காததுடன் கிரய மதிப்பீடு நிர்மாணத் திட்டம் போன்ற எதுவும் நிதியத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் தொழில் நுட்ப உத்தியோகத்தரொருவரின் சான்றிதழ் இன்றி ஒப்பந்தத்திற்கான முழுத்தொகை செலுத்தப்பட்டிருந்தது.

4.5 **வெளிப்படையான மோசடிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) "எங்களது பாரம்பரியம்" கற்புல செவிப்புல ஆவண நிகழ்ச்சித்திட்டத்தின் தயாரிப்பு

(i) இந்த ஆவண நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரிப்பதற்காக முறையான கொள்வனவு நடைமுறையினை பின்பற்றாமல் திரைப்படத் தயாரிப்பாளரொருவருடன் ரூபா 18,725,700 மொத்தப் பெறுமதியுடைய மூன்று ஒப்பந்தங்கள் 2011,2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கைச்சாத்திடப்பட்டிருந்தன.

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 7,237,000 பெறுமதியான முதலாவது மற்றும் இரண்டாவது உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்தக் காலத்தினுள் பணிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்த போதிலும் முழுத்தொகையும் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2014 ஆகஸ்ட் 19 ஆந் திகதி ரூபா 11,488,700 ஏற்படுத்தப்பட்ட இரண்டாவது உடன்படிக்கையின் படி நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு கையளிக்கப்படாதிருந்த போதிலும் உடன்படிக்கை பெறுமதியின் 40 சதவீதம் அல்லது ரூபா 4,595,480 செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனைகளின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியினுள் பணிகளை பூர்த்தி செய்து ஒப்படைக்கவில்லையாயின் உடன்படிக்கையை இரத்துச்செய்து பணம் செலுத்துதல் நிறுத்தப்பட வேண்டுமெனினும், அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருக்காமை தொடர்பில் ஒப்பந்ததாரருக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கஹவில்கொட தேசிய பாரம்பரிய எண்ணக்கருவில் தூதனசாலையை நிர்மாணித்தல்

இந்த நிர்மாணத்திற்காக தேசிய பாரம்பரிய பூங்கா நம்பிக்கைப்பொறுப்பு எனும் பெயரில் எதுவித சட்டரீதியான அடிப்படையுமில்லாத நிறுவனமொன்றிற்கு 3 வருடங்களினுள் ரூபா 60 மில்லியன் தொகையினை கடன் அடிப்படையில் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் பெப்ரவரி 19 ஆந் திகதி ஒப்பந்தமொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2015 சனவரி 30

ஆந் திகதி வரையிலும் ரூபா 30.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 1980 இன் 57 ஆம் இலக்க மத்திய காலாசார நிதிய அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் அமைச்சரவை அங்கீகாரம் இல்லாமலும் வெளி தரப்பினரொருவருக்கு கடன் வழங்கப்பட்டிருந்தது.

(ii) நிர்மாண திட்டமொன்று, மதிப்பீடொன்று, அளவீட்டுப் பட்டியலொன்று அல்லது நிறைவேற்றப்படுகின்ற பணிப்பொறுப்பு, நிதி செலவிடப்படும் விதம் தொடர்பான விபரங்கள், வேலை நிறைவேற்றறிக்கைகள் மற்றும் பொறியியலாளர் சான்றிதழகள் போன்ற எதுவித சான்றுகள் இல்லாமலும் வேலை கண்காணிப்பொன்றில்லாமலும் ரூபா 30.5 மில்லியன் தொகை இந்த நம்பிக்கைப் பொறுப்பிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இவ்வாறானதொரு விசேட நிர்மாணமொன்றிற்கு தேவையான அரச நிறுவனங்களின் அங்கீகாரம் எதுவும் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் நிர்மாணம் இடம்பெறுகின்ற காணிக்குரிய அதன் உரிமையாளரால் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பில் கவனத்திற் கொள்ளாது மத்திய கலாசார நிதியத்திலிருந்து நிதி விடுவிக்கப்பட்டிருந்தது.

(இ) வெளிநாட்டு சுற்றுலா நுழைவுச் சீட்டுகளுடன் இலவசமாக வழங்குவதற்காக DVD கொள்வனவு செய்தல்

தேவைப்பாட்டினை மதிப்பீடு செய்யாமலும் முறையான கேள்வி நடைமுறைகளை பின்பற்றாமலும் சீகிரிய, பொலன்னறுவை மற்றும் அனுராதபுரம் போன்ற புனித தலங்கள் உள்ளடங்கிய 5 இலட்சம் DVD களை கொள்வனவு செய்வதற்காக முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ரூபா 51,099,925 தொகை திரைப்படத் தயாரிப்பாளரொருவருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

ஒப்பந்ததாரரால் நிதியத்திற்காக இதற்கு முன்னர் தயாரிக்கப்பட்ட நிகழ்ச்சியொன்றின் காட்சிகளை கணனி மூலம் பிரதி செய்து உரிய DVD கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், நிதியத்தின் முன்னாள் பணிப்பாளர்

நாயகம் அதனை மறைத்து கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமை காரணமாக ரூபா 50 மில்லியனுக்கு அதிகமான தொகையினை மோசடி செய்வதற்கு ஒப்பந்தகாரரால் இயலுமாகவிருந்தது. இது தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்றினை மேற்கொள்ளுமாறும் மோசடி தொடர்பாக காவற்துறைக்கு முறைப்பாடு செய்யுமாறும் அரச கணக்குகள் குழு மற்றும் அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமைச்சின் செயலாளருக்கு கட்டளையிட்டிருந்த போதிலும் செயலாளர் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

4.6 குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அலஹான செயற்திட்டத்தில் குவித்து வைக்கப்பட்டுள்ள 11,377 ஓடுகளை ஏலமிடுவதற்கோ அல்லது கைதவிர்ப்பதற்கே தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்திற்குச் சொந்தமான 16 வாகனங்கள் ஒராண்டிற்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் தலைமை அலுவலகத்திலும் செயற்திட்டத்திலும் உடைந்த நிலையில் பாதுகாப்பற்ற முறையில் தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களில் 8 இனை மீளாய்வாண்டில் காப்புறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

4.7 சிக்கனமற்றக் கொடுக்கல் வாங்கல்கள்

சீகிரியா செயற்திட்டத்தின் பழைய சிற்றுண்டிச்சாலை ரூபா 6,599,746 செலவிடப்பட்டு முழுமையாக நவீனமயப்படுத்தப்பட்டு அது மீளாய்வாண்டினுள் நடாத்திச் செல்வதற்காக எதுவித வாடகையும் அறவிடப்படாது வெளிநபரொருவருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், நிதியத்தின் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் பழைய சிற்றுண்டிச்சாலை நடாத்திச் செல்லும் போது மாதமொன்றிற்கு ரூபா 24,000 வாடகை நிதியத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சிற்றுண்டிச்சாலையின் 2014 ஆம் ஆண்டிற்குரிய மின்சாரக் கட்டணமும் நிதியத்தின் மூலம் செலுத்தப்பட்டிருந்ததுடன், சனவரி முதல் யூலை மாதம் வரையான 7 மாதங்களுக்கான மின்சாரக் கட்டணம் ரூபா 627,064 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 123 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

4.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய கலாசார நிதியத்தின் பாவனைக்குதவாத 17 வாகனங்களை விற்பதற்காக 2014 யூலை 11 ஆந் திகதி திறந்த பத்திரிகை விளம்பரமொன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், 49 விண்ணப்பதாரர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த விலைமனுக்கள் 2014 ஆகஸ்ட் 06 ஆந் திகதி திறக்கப்பட்டிருந்தது. 15 வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,110,000 ஆக இருந்ததுடன் அந்த 15 வாகனங்களுக்கு கிடைக்கப்பெற்றிருந்த ஆகக்கூடிய கூறுவிலைப் பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11,147,999 ஆக இருந்தது. அந்த விலைமனுக்களிற்கு மோட்டார் வாகனங்களின் விற்பனை சாத்தியமானதாக இருந்த போதிலும் எதுவித காரணமொன்றும் இல்லாமல் வாகன விற்பனை இடைநிறுத்தப்பட்டமையின் காரணத்தால் நிதியத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த வாகன அகற்றல் இலாபம் இழக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிதியத்தினால் பேணப்படுகின்ற உருவச்சிலைகளின் உற்பத்தி பாடசாலை மூலம் விற்பனை செய்வதற்காக உற்பத்தி செய்யப்படுகின்ற உருவச்சிலைகளின் உற்பத்திகளில் மீளாய்வாண்டினுள் ரூபா 4,278,305 கிரயமான உருவச்சிலைகளின் உற்பத்திகள் அங்கீகாரமின்றி வெளித்தரப்பினருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தது. அதன் விற்பனை பெறுமதி ரூபா 9,271,550 ஆகும்.

(இ) யாப்பகூவ செயற்திட்டத்திற்கு பலகைகளை பெற்றுக்கொள்ளும் போது அங்கீகரிக்கப்பட்ட பலகை ஆலையின் உரிமையாளரிடம் அல்லது பலகை பிரதிநிதியொருவரிடம் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக அனுமதிப்பத்திரமின்றி பலகைகளை வைத்துள்ளோரிடம் ரூபா 1,163,525 பெறுமதியான பலகை மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த பலகைகள் சட்டவிரோதமானவையாக இருந்ததால் அவை நீதிமன்றத்தின் பொறுப்பிற்கு எடுக்கப்பட்டிருந்தது.

4.9 நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னாள் சனாதிபதியின் பிறந்ததினம் மற்றும் பதவியேற்புத் தினத்திற்காக முன்னாள் அமைச்சரின் செய்தியினை பத்திரிக்கையொன்றில் வெளியிடல் மற்றும் வாழ்த்து தெரிவிப்பதற்காக மீளாய்வாண்டினுள் நிதியத்தினால் ரூபா 1,986,200 செலவிடப்பட்டிருந்தது. மேலும் முன்னால் அமைச்சருக்கு மல்வத்தை மஹா விஹாரையின் விங்சத்வர்கிக செயற்பாட்டுக் குழுவினால் வழங்கப்படுகின்ற கௌரவ விருதொன்றிற்காக உதவி வழங்குவதற்காக பத்திரிகை அறிவித்தலொன்றை வெளியிடுவதற்காக நிதியத்தினால் ரூபா 413,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) அரச தலைவர்களின் ஆசிய சங்கம் எனும் பெயருடைய வெளிவாரி தனியார் நிறுவனமொன்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை மாநாடொன்றிற்காக அனுசரணைக் கொடுப்பனவாக நிதியத்தினால் ரூபா 400,000 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அமைச்சரின் அறிவுரையின் அடிப்படையில் அவரின் ஊடக செயலாளரால் 2015 ஆம் ஆண்டிற்கான 7,500 புதுவருட வாழ்த்துமடல்களை அச்சிடுவதற்காக நிதியத்தினூடாக ரூபா 199,634 செலவிடப்பட்டிருந்தது.

4.10 ஏனைய அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வெளித்தரப்பிரனருக்கு வழங்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீகிரியா செயற்திட்டத்திற்குரிய ரூபா 1,614,965 பெறுமதியான 474 இரும்பு குழாய்கள் (GI குழாய்கள்) மற்றும் 677 கப்லீன்கள் நிர்மாணப் பணிகளுக்கு பயன்படுத்துவதற்காக வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததெனினும் அவற்றை மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பொருட்கள் நிதியத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் 1 ½ வருட காலமாக வெளிநபர்களின் பொறுப்பில் காணப்பட்டது.

(ஆ) சீகிரிய செயற்திட்டத்திற்குரிய கெப் வண்டியொன்று அமைச்சின் தேவைப்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் மார்ச் 12 ஆந் திகதி முதல் ஏப்ரல் 21 ஆந் திகதி வரை வழங்கப்பட்டு 2065 கி.மீ பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், முன்னாள் அமைச்சரின் பாவனைக்காக 2012

யூன் 12 ஆந் திகதி கெப் வண்டியொன்று எடுத்துச்செல்லப்பட்டிருந்ததெனினும், அது கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த வாகனத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்காக நிதியத்தினால் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மத்திய கலாசார நிதியத்தின் நிரந்தரப் பதவியணிக்குரிய 4 உத்தியோகத்தர்கள் கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் சேவையாற்றுவதற்காக பல வருடங்களுக்கு முன்னர் விடுவிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் சனவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியினுள் அவர்களின் சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,590,744 கூட்டுத்தொகை நிதியத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அஹயகிரிய செயற்திட்டத்திற்குரிய ரூபா 11,520,000 பெறுமதியான 3204 இரும்புக் குழாய்களும் (GI குழாய்கள்) 4320 கப்லீன்களும் 2010 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் மீளாய்வாண்டின் நவெம்பர் 10 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் 12 சந்தர்ப்பங்களில் வெளிநபர்களுக்கு முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் இப் பொருட்கள் மீளப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.11 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீகிரியா செயற்திட்டத்தின் தொழிலாளர் பதவியில் 45 ஊழியர்கள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்திட்ட அலுவலகத்தில் நாளாந்த கடமைகளுக்கு அப்பால் பாதுகாப்பு சேவையின் கடமைகளிலும் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் தொழிலாளர்களின் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக கூலி அடிப்படையில் ஊழியர்களை ஈடுபடுத்த வேண்டியிருந்தது. தேவையின் பிரகாரம் தொழிலாளர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் சேவைகளின் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சீகிரியா செயற்திட்டத்தின் 10 பாதுகாப்பு நிறைவேற்று உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதத்தினுள் 36 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் தொழிலாளர் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளை புறக்கணித்து செயற்பட்டிருந்தனர்.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறை ஏற்பாடுகளின் பிரகாரம் அகழ்வு பரிசோதகர் I தரத்திலிருந்து செயற்திட்ட முகாமையாளர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நேர்முகப்பரீட்சைக்கான அழைப்பு விடுக்கப்படவேண்டுமெனினும், நேர்முகப் பரீட்சைகள் நடாத்தாது, அகழ்வு பரிசோதகர் I தரத்தின் உத்தியோகத்தரொருவருக்கு செயற்திட்ட முகாமையாளர் பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டு 13 சம்பள ஏற்றங்களும் வழங்கப்பட்டிருந்தன. அந்த உத்தியோகத்தருக்கு செயற்திட்ட முகாமையாளர் பதவிக்கு பதவியுயர்த்தும் போது நியமனத்தை முற்திகதியிடுவதற்காக தாபனவிதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1.10 ஆம் பிரிவின் பிரகாரம் தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முறையான அங்கீகாரமின்றி புதிய பதவிகளை உருவாக்கல் மற்றும் பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட எல்லையினை மிகைத்து ஆட்சேர்க்கப்படக்கூடாதென 2011 யூலை 21 ஆந் திகதிய DMS/E1/54/9/241 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும் அதற்கு முரணாக செயற்பட்டு மீளாய்வாண்டில் 06 உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கும் 03 செயற்திட்ட முகாமையாளர் பதவிகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விஞ்சி நியமனம் வழங்கப்பட்டிருந்ததுடன் சம்பளங்களும் படிகளும் செலுத்தப்பட்டிருந்தன.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ் 423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 02 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

5.2 கட்டுப்பாட்டுச்சபைக் கூட்டங்களை நடாத்துதல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் நிதியத்தின் கட்டுப்பாட்டுச்சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்காக 4

கட்டுப்பாட்டுச்சபைக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன. 2014 யூன் 06 ஆந் திகதியின் பின்னர் 2015 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கட்டுப்பாட்டுச்சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்குரிய பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களை மற்றும் உள்ளவாறான வருமானச் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 20 சதவீதம் முதல் 123 சதவீதம் வரையான வீச்சில் விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) (i) பொலன்னறுவை புனித பூமியின் உள்ளக நுழைவு வீதியில் 1 கிலோமீற்றர் நீளத்திற்கு சீமெந்து கொங்கிரீட் கற்கள் இட்டு அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள் ஒப்பந்தக் கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டு அதற்காக ரூபா 28,255,312 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2012 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த, உரிய தரத்தைக் கொண்டிராத கொங்கிரீட் நிர்மாணத்திற்காக ரூபா 22,099,917 தொகை செலுத்தியமை, அளவீட்டுப் பட்டியலின் படி நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 4,660,998 தொகை செலுத்தியமை மற்றும் ABC கலவை விகிதம் 40 சதவீதத்தாலும் கற்தூள் கலவை 50 சதவீதத்தாலும் குறைவாக ஈடுபடுத்தியதன் காரணமாக வீதியை சமப்படுத்த முடியாமை போன்ற குறைபாடுகள் தொடர்பில் 2015 யூலை 30 வரையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பொலன்னறுவை புனித பூமியின் வெளிச்செல்லும் வாயிலிலிருந்து உள்ளக வீதியினை 01 கிலோமீற்றர் நீளத்திற்கு சீமெந்து கொங்கிரீட் கற்கள் பரப்பி அபிவிருத்திச் செய்யும் செயற்பாடு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 27,500,000 தொகைக்கு ஒப்பந்தம் ஒப்படைக்கப்பட்டு அதற்காக ரூபா 29,235,510 செலுத்தப்பட்டிருந்தது. கொள்வனவுக் குழுவின் அங்கீகாரம் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளாமல்

அங்கீகாரமின்றி வீதியின் அகலத்தினை அதிகரித்தல் மற்றும் நியமமொன்றில்லாமல் செயற்பட்டமையின் காரணமாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 48,575,893 வரை அதிகரித்தமை மற்றும் உரிய நியமமொன்றில்லாத சீமெந்து கொங்கிரீட் கற்கள் நிர்மாணத்திற்கு பயன்படுத்தப்பட்டு, அதற்காக ரூபா 16,992,545 செலுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் 2013 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரியதாக இதுவரையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக தகுதியற்ற உத்தியோகத்தரொருவர் ஒப்பந்த அடிப்படையில் 2013 யூன் 01 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஆட்சேர்க்கப்பட்டமை தொடர்பில் நிலவிய குறைபாடுகள் 2013 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் அந்த உத்தியோகத்தர் நிதியத்தின் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 478,620 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வரையறுக்கப்பட்ட கலாச்சார பாதுகாப்பு மற்றும் நிர்மாணங்கள் தனியார் கம்பனியின் பயிற்சி பாதுகாப்பு / அகழ்வு உதவியாளர்களாக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக்கொள்வது தொடர்பில் நிலவிய குறைபாடுகள் 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்த கம்பனியிடமிருந்து ஊழியர்களைப் பெற்றுக்கொண்டு அதற்காக ரூபா 142 மில்லியன் தொகையான படிகள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஈ) மத்திய கலாசார நிதியத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத மற்றும் மத்திய கலாசார நிதிய அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்படாத செயற்பாட்டு பணிப்பாளர் பதவியொன்றிற்காக 2006 சனவரி முதல் 2013 திசெம்பர் மாதம் வரையிலும் மாதாந்தப் படிகளாக ரூபா 4,494,105 செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் மத்திய கலாசார நிதியம் மூலமும் முழுச் சம்பளங்களை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அந்த இரு நிறுவனங்களிலும் ஒதுக்கப்பட்ட இரண்டு வாகனங்களைப் பயன்படுத்துதல் மற்றும் எரிபொருள் படிகளை பெற்றுக்கொண்டிருந்தமை தொடர்பில் 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பில் எதுவித

நடவடிக்கையும் எடுக்கப்படாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் சனவரி மாதம் தொடக்கம் 2015 சனவரி மாதம் வரையிலும் மாதாந்த படிகளாக மேலும் 886,730 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்தினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாட்டுப் பரப்புக்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமானக் கட்டுப்பாடு

(இ) கொள்வனவு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) வாகனப் பயன்பாடு

(ஊ) பதவியணியினர் முகாமைத்துவம்

(எ) சுற்றுலா நுழைவுச்சீட்டு அச்சிடல், விற்பனை மற்றும் கையிருப்புக் கட்டுப்பாடு தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.